Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ...ச. முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 24 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 29 (07.06.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:251

## அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்

# பொதுக் கட்டமைப்பு தொடர்பாக ஆராய

# சந்திரிகா அவசர கூட்டத்துக்கு அழைப்பு!



கொழும்பு—

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பதற்காக அவசர கூட்டமொன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத் துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் நடத்தத் திட்டமிட் டிருந்த இந்தக் கூட்டம் - இறுதிநேரத்தில் இரத்துச்செய் யப்பட்டதுடன் இன்று காலை 8[illegible]0 மணிக்கு நடைபெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இந்தக் கூட் டத்தில் ஆளும் கூட்டணியிலுள்ள அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு செய்துகொள்வது குறித்து ஜனாதிபதி சந்திரிகா அறிவிப் பார் என்றும் - இது தொடர்பாக அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கருத்துக்களைக் கேட்டறிவார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்புக்கு இந்தியா வின் ஆதரவு கிடைத் துள்ள நிலையில் - கூட்டணிக் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோருவார் என்றும் - அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கட்சிகளிடம் ஜனாதிபதி கடுமையாக நடந்து கொள்ளக்கூடும் என்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வான்படை: இலங்கையின் உள்விவகாரம்!

### இந்திய விமானப்படை தளபதி கருத்து

புதுடெல்கி—

விடுதலைப் புலிகளின் வான்படை இந்தியாவுக்கு எந்தவகையில் அச்சுறுத்தலாக அமையும் என்பது குறித்து தம்மால் கூறமுடியாது என்றும் - இது இலங்கையின் உள்விவகாரம் என்றும் இந்திய விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் எஸ்.முகர்ஜி தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் ஊடகவியலாளரிடம் பேசிய முகர்ஜி, இலங்கை நிலவரங்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். இருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் இன்று புலிகளுடன் முக்கிய சந்திப்பு

கொழும்பு—

நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இன்று காலை கிளிநொச்சிக்கு வரும் ஹான்ஸ் பிரட்ஸ்கர், 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்.

இந்தச் சந்திப்பின்போது பொதுக்கட்டமைப்பு உடன்பாடு, விடுதலைப் புலிகளின் தளபதிகளுக் கான போக்குவரத்துக்கு அனுமதியளிப்பது, அதிகரித்துவரும் கொலைச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தப்படும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின் பின்னர் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டுக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சுட்டுக் கொலைகள்!

### வாழைச்சேனையில்...

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை - வாகரை வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக வீசப்பட்டுள்ளார்.

இறால்ஓடையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சசிகரன் (வயது 19) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் நேற்று நண்பகல் பயணஞ்செய்துகொண்டிருந்தபோது கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்த நபர் சுட்டுக்கொல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு நகரில்...

## உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில்

# கடற்தொழில் - விவசாயத்துக்கு



(12 ஆம் பக்கம் பார்க்க)

இந்தச் சந்திப்பின்போது பொதுக்கட்டமைப்பு

தாகத் தெரியவருகிறது.

பட்டதாகக் கூறப்படும் இந்த நபர் சுட்டுக்கொல

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில்
# கடற்தொழில் – விவசாயத்துக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்!
## மனித உரிமைஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள பகுதிகளில் கடற்தொழிலாளர்கள், மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென மனிதஉரிமை ஆணைக்குழுவின் தலைவர் ராதிகா குமாரசாமி தெரிவித்தார்.

மனித உரிமைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் ராதிகா குமாரசாமி தலைமையிலான குழுவினர் இங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

நேற்றுக்காலை அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை – மனிஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் அழைத்து சந்திப்பு ஒன்றினை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது குடாநாட்டுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது உயர் பாதுகாப்பு வலயத்தினால் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரமுடியாமல் இருப்பது, விவசாய நிலங்கள் இராணுவத்தினரின் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளமையால் விவசாயம் செய்ய முடியாது அதனை நம்பி வாழும் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன், பாதுகாப்பு வலயங்களின் பாதுகாப்பினை காரணம்காட்டி கடற்தொழிலாளர் மீன்பிடிக்க முடியாதிருப்பதுடன் அவர்கள் மீது இராணுவத்தினர் விதித்துள்ள கட்டுப்பாடுகள் குறித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தலதா மாளிகைக்கு முன்பாக ஹெலஉறுமய சத்தியாக்கிரகம்



கொழும்பு

விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் நூறு வரையான பௌத்த பிக்குகள் – ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரரின் தலைமையில் கண்டி தலதா மாளிகையின் முன்னால் சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டத்தை நேற்றிரவு முதல் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் குறித்து சோபித தேரர் கருத்துத் தெரிவிக்கையில் –

சிங்கள பௌத்தத்தையும், இராணுவ புலனாய்வுத்துறை உறுப்பினர்களையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென நாம் அதிகாரிகளைக் கேட்டுள்ளோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில்...

கொழும்பு

கொழும்பு நகரில் நேற்றும் தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெள்ளவத்தை – நெல்சன்பிளேசில் உள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை 2.20 மணியளவில் உள்நுழைந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட பின்னர் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த தமிழ் இளைஞர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

கொல்லப்பட்டவர் தம்பிராய் – பூநகரியைச் சேர்ந்த வீரவாகு இந்திரகுமார் (வயது 27) எனத் தெரியவந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு உறுப்பினர்...

மட்டக்களப்பு

மட்டக்களப்பு – வாழைச்சேனையில் கருணா குழுவைச் சேர்ந்தவரான கறுவல்தம்பி பாக்கியராசா என்பவர் நேற்றுமுன்தினம் இரவு வ...டி லிருந்து கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

முத்துக்கலவைச் சேர்ந்த கறுவல் தம்பி பாக்கியராசா (வயது44) வாழைச் சேனை – ஆலங்குளத்தில் வசித்து வருபவர். கடந்த ஒரு வருடத்துக்குமுன்னர் இவர் பொலனறுவ மாவட்டத்திலுள்ள தீவுச்சேனைக்குச் சென்றிருந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வாழைச் சேனைக்குத் திரும்பியிருந்த இவரது வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்ற இனந்தெரியாத நபர்கள் இவரைக் கடத்திச் சென்றிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முன்பள்ளி ஆசிரியருக்கான உளச்சார்பு செயலமர்வு

யாழ்ப்பாணம்—

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனம் முன்பள்ளி சிறார்களினதும், அவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களினதும் அறிவுத்திறன் உளவிருத்தி என்பவற்றை கருத்திற்கொண்டு ஆக்கபூர்வமானநடவடிக்கைகளைத்தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகிறது. மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனம், போரூட் பீப்பிள் நீட் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் களுக்கான உளச் சார்பு செயலமர்வொன்று நடத்தப் பட்டுவருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் தலைமையில் மட்டக்களப்பு மன்றேசா தியான இல்லத்தில் நேற்று இச்செயலமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டு தொகுதிகளாக இடம் பெற்றுவரும் இந்நிகழ்வு நாளை மறுதினம் முடிவடையும். முதலாவது தொகுதிச் செயலமர்வு நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் போரூட் நிறுவனப் பிரதிநிதிகள் உட்படகல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு வலய உதவிக்கல்வி பணிப்பாளர்களும், மட்டக்களப்பு மாவட்ட உள்ளகத் துறை இணைப்பாளரும் இதில் பங்கு கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக இரண்டாவது தொகுதிச் செயலமர்வு நாளை ஆரம்பமாகவுள்ளது. இதில் 180 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

நெடுந்தீவு—

நெடுந்தீவுபிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்து இன்றும்,நாளையும்ஏற்றப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிமுதல் 11மணிவரை இரண்டாம் வட்டாரத்திலுள்ள பொதுநூலகத்திலும், 10.30முதல்11.30மணிவரை முதலாம் வட்டாரம் ஐக்கியதீபம் சனசமூகநிலையத்திலும், நண்பகல் 12 மணிமுதல் 1மணி வரையும் நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயத்திலும், பிற்பகல்1.30 மணி முதல் 2.30 மணிவரையும் இரண்டாம் வட்டாரத்திலுள்ள வளர்மதி சன சமூக நிலையத்திலும் -

நாளை காலை 9மணிமுதல் 11மணிவரை நான்காம் வட்டாரத்திலுள்ள பாலமுருகன் முன்பள்ளியிலும் 10.30மணிமுதல் 11.30மணி வரையும் ஐந்தாம் வட்டாரத்திலுள்ள சாரப்பட்டி பொதுக்கிணற்றடியிலும் நண்பகல்12 மணி முதல் 1 மணிவரையும் ஆறாம் வட்டாரம் சென்ஜேம்ஸ் சனசமூகநிலையத்திலும் 1.30 மணிமுதல் 2.30 மணி வரை பத்தாம் வட்டாரத்திலுள்ள பிரதேச சபை அலுவலகத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் தமது வளர்ப்பு நாய்களை குறித்த இடத்திற்கு கொண்டு சென்று தடுப்பு மருந்தினையேற்றுமாறு நெடுந்தீவு பிரதேச சபை சுகாதார வைத்திய அதிகாரி கே. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
3 ஆவது வெற்றி வாரமாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
காட்சிகள் 10.30,2.30, 6.30,9.30

மனோகரா யாழ்ப்பாணம்
இன்று மட்டும் ராம்
நாளை முதல் ஸ்ரீகாந்த், கோபிகா, விவேக் நடித்த கனா கண்டேன்
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த
சூர்யா

ஆக்ஷன் படம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்

சந்திரமுகி
54 ஆவது நாளாக கடைசி வாரம்
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் விஜய், தேவயானி,ரம்பா நடித்த
நினைத்தேன் வந்தாய்
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு
Muthayamal Educational Institutions
RASIPURAM-637408, NAMAKKAL-(DT) TAMILNADU. www.muthayammal.com

இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| | | |
| B.Sc. Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

Call : 0777 767818 / 011-4512591 for prospectus and application forms
SCHOLARS INFORMATION CENTER
2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com


# வரவேற்பு நிகழ்வும் விரிவுரை ஆரம்பமும்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மற்றும் பழைய மாணவர்களுக்கான வரவேற்பு வைபவமும், விரிவுரையும் எதிர்வரும் சனிக்கிழமை 9.00மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் மாணவர் பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்து பாடப்புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாமென இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய இயக்குனர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரா அறிவித்துள்ளார்.

# நல்லை ஆதீன முதல்வரின் அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணம்—

பேராசிரியர் சிவஞானசுந்தரத்தின்(நந்தி) மறைவு தமிழ்மக்கள் அனைவரினதும் நெஞ்சத்தை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. நல்ல மனிதரை இன்று நாடு இழந்து விட்டது என நல்லை ஆதீன முதல்வர் - நந்தியின் மறைவு குறித்துவெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்

நல்ல வைத்தியராக நிறைந்த-சிந்தனையாளராக ஆத்மீக ஞானியாக எல்லோரையும் மனிதநேயத்துடன் சிந்திக்கின்ற பேராசிரியர் நந்தியினுடைய மறைவு இந்த நாட்டிற்கு பேரிழப்பாகும். எழுத்தாற்றல் மூலமாக நந்தி எனும் முத்திரை பதித்தவர் வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாணசபை
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்பு திட்டம்
(நீகோட் - விஸ்தரிப்பு)

**நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி**

**ஆஅவ கடன் இல.2084 - சிறீ (எஸ்எவ்)**

**குடிசார் வேலைகளைப் பெறுதல்**

# கேள்வி அறிவித்தல் - இல:42

1) வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD - Ext) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ.") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2) இதன் பின்னால் தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD திட்டக்கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கேரப்படுகின்றன.

| ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTADபதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| KN/NECORD - Ext/ED/01 | கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீட மீள் ஒழுங்கமைப்பு - கட்டம் - 1 | M 3 கட்டடங்கள் | 734,000/= |
| VA/NECORD - Ext/ID/01 | வவுனியா, கலாச்சார மண்டபம் புனரமைப்பு | M 4 கட்டடங்கள் | 331,750/= |

3) பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடையசகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.)உறுப்பினராக (ICTAD உடன் M 7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளரிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

4) ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5) ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி:- 026-2227434, ஃபக்ஸ்:- 026-2227401 இணையத்தள முகவரி:- WWW.necord.org ஈமெயில் necord@sltnet.lk)

6) கேள்வி ஆவணங்களை 10-06-2005 இலிருந்து 27-06-2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 5,000 ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7) பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச் சபை நீக்கோட், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை. என்று விலாசமிடப்பட்டு 01-07-2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

8) முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 27-06-2005 ஆம் திகதி அன்று காலை 11.30 க்கு நடைபெறும்.

9) இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாகப் பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

10) கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர், கேள்விச் சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம்,
55, கந்தசுவாமி கோயில் வீதி,
திருகோணமலை.

(C/4189)

# நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதை தவிர வேறு வழியில்லை!



## நிதியமைச்சர் கூறுகிறார்

கொழும்பு—

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுமல்ல நட்டத்தில் இயங்கும் அனைத்து அரச நிறுவனங்களும் மறுசீரமைக்கப்படவேண்டும் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியுள்ளதாவது-

மறுசீரமைப்பு செய்யாது நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களைக் கொண்டு நடத்த புதிய ரூபா நோட்டுக்களை அரசாங்கம் அச்சடிக்கவேண்டி ஏற்படும்.

அவ்வாறு செய்தால் பணவீக்கமே அதிகரிக்கும். அதனால், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காத வரை இந்த நாட்டின் வாழ்க்கைச்செலவைக் குறைக்க முடியாது என்று என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்.

அரசாங்கத்தால் 8 சதவீத பொருளாதார வளர்ச்சியை நோக்கி செல்லமுடியாததற்கும், பணவீக்கத்துக்கும் முக்கிய காரணமாக இருப்பது இந்த நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களாகும்.

இந்த நிறுவனங்களில் மந்த செயற்பாடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இன்று உலகிலேயே அதிக மின்கட்டணம் இருப்பது இலங்கையில்தான். அதனால் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வர விரும்புவதில்லை.

இந்த நிலைமையை நுகர்வோராலும் சமாளிக்கமுடியாதுள்ளது. இந்த நிறுவனங்களை மறுசீரமைத்து, மின் கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுத்தால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் இலங்கைக்கு வருவார்கள். அதன் மூலம் மக்களுக்கு சில நிவாரணங்கள் கிடைப்பதுடன், பொருட்களின் விலையும் குறையும்.

இந்த நிறுவனங்களே எமது பொருளாதாரத்திலிருக்கும் ஊனம். அந்த நிறுவனங்கள் பின்நோக்கிச் செல்வதால், பொருளாதாரமும் பின்னோக்கிச் செல்கிறது. பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமாயின் நிதியமைச்சர் என்ற வகையில் நான் கூறுவது இந்த நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதே என அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கவே பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுகிறது!

## சந்திரிகா மீது விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் கூட்டணி அரசாங்கம் நிச்சயமாகக் கவிழும். இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்படுவார் என்று ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

குருநாகலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் சுமார் 2500 கட்சிப் பிரதிநிதிகள் பங்குபற்றினர். 'ஏன் பொதுக் கட்டமைப்பை எதிர்க்கிறோம்' என்பதை விளக்குவதற்கான இந்தக் கூட்டத்தில் விமல் வீரவன்ச மேலும் உரையாற்றும் போது -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடுவாரேயானால் இந்த அரசாங்கம் கவிழ்ந்துவிடும். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியான ஜே.வி.பியின் கூட்டணியும் முறிந்து போய் விடும்.

இதனால் ஆளும் கூட்டணியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே நெருக்கடிக்குள் தள்ளப்படுவார். அவர் நிச்சயமாக தேர்தலில் தோல்வியடைவார்.

இதனை நோக்கமாகக் கொண்டுதான் ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பை உருவாக்க முனைகிறார்.


சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பாலான அதிகாரங்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமே உள்ளது. அரசாங்கம் கவிழ்ந்து - ஜனாதிபதித் தேர்தலிலும் "மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் அவர் எதிர்க் கட்சித் தலைவராக வருவார்.

ஆனால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதுவுமற்ற ஒருவராக மாறிவிடுவார் என்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

(01)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

# போரை ஆரம்பிக்குமாறு கோருவோர் மனநோயாளிகள் என்கிறார் குணசேகர



கொழும்பு—

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண போரைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்துவோர் மனநோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியவர்களே என்று அரசியல் யாப்பு சீர்திருத்த அமைச்சர் டியு குணசேகர தெரிவித்தார்.

மகரகமவில் நடைபெற்ற தேசிய இளைஞர் நாள் விழாவில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

அனைத்து மதத்தலைவர்களும் அமைதியையே உலகில் பிரசங்கம் செய்து வந்துள்ளனர். ஆனால் மிகப்பெரிய மதங்களைப் பின்பற்றுகின்ற இலங்கையில் மட்டும்தான் 22 ஆண்டுகளாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாமல் உள்ளது.

போரின் மூலம் சாதித்தது ஒன்றும் அல்ல. அனைத்து இனங்களிலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான உயிர்களைப் பலிகொடுத்திருக்கிறோம். உண்மையாகவே மதத்தைப் பின்பற்றுகின்ற நாம் இத்தகைய சிக்கல்களுக்கு பேச்சுக்களின் மூலமே தீர்வுகாண வேண்டும்.

எந்தவொரு நாடும் இனப்பிரச்சினைக்குப் போரின் மூலம் தீர்வுகாண முடியாது. பேச்சுக்களின் மூலமே தீர்வுகாணமுடியும்.

இலங்கை அரசாகட்டும் - அல்லது விடுதலைப் புலிகளாகட்டும் போரில் வெற்றிபெற்றாலும் அழிவைத்தானே சந்திக்க நேரிடுகிறது. இரு தரப்பினருக்கும் திருப்தியளிக்கக்கூடியதை பேச்சுக்களின் மூலம் உருவாக்கிக்கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பும் உண்மையான சக்திகள், அமைதியை நேசிக்கும் சக்திகள் பொதுக்கட்டமைப்பு போன்றதொரு சூழலைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். மீண்டும் போரைத் தொடங்கினால் மக்களின் வாழ்வில் இருண்டதொரு பகுதியைத்தான் உருவாக்குவார்கள்.

அமைதிப் பேச்சுக்களை முடக்குகிறவர்கள் அதற்குரிய விலையைக் கொடுத்தே ஆகவேண்டும். தென்னிலங்கைக்கும், வட பகுதிக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்தப்படவேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் பேசிய இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, ஒட்டு மொத்த இலங்கையும் அமைதியைத்தான் விரும்புகிறது.

இங்கே அமைதியும் இயல்பு வாழ்க்கையும் அனைத்து இன மக்களிடமும் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான நல்ல வாய்ப்பு எம்மிடம் உள்ளது. அதை நாம் தவறவிடக்கூடாது எனத் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்புக்கு இந்திய ஆதரவு; கட்சிகளின் கருத்து நிலைப்பாடுகள்!



கொழும்பு—

சுனாமி அனர்த்த மீளமைப்புக்காக விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்குவதற்கு இந்தியா ஆரதரவு தெரிவித்துள்ளது.

இதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது குறித்து கூறியுள்ளதாவது -

பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கும் இந்திய இலங்கை அரசுகளின் கூட்டறிக்கை வடக்கு - கிழக்கு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக உள்ளது. சுனாமி அனர்த்த மீளமைப்புப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கும் இந்தியாவின் புரிந்துணர்வை வரவேற்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

புளொட் தலைவர் த.சித்தார்த்தன் இது குறித்து தெரிவித்துள்ளதாவது -

பொதுக்கட்டமைப்புக்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளதன் மூலம், மீளமைப்புப் பணிகள் மற்றும் மறுசீரமைப்புக்களுக்குத் தீர்வு காண்பதற்கு மட்டும் உதவியாக இல்லாமல், அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வுக்கும் பங்காற்றும் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ராதாகிருஷ்ணன் கருத்துத் தெரிவிக்கையில் -

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான இரண்டு நாடுகளின் ஈடுபாட்டை இந்தியாவின் அறிவிப்பு வெளிப்படுத்துகிறது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் அனைத்து அமைதி முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவளிக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பதில் முக்கிய பங்காற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்டுள்ள முயற்சிகளை வரவேற்கிறேன் எனத் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பு சிக்கல்களில் ஜனாதிபதி வெற்றி கண்டுள்ளாராம்!



## சமாதான செயலகம் கூறுகிறது

கொழும்பு—

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்புப் பணிகளுக்கென உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இது நாள் வரை இருந்து வந்த சிக்கல்களிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா வெற்றி கண்டுள்ளதாகவும், எனவே பொதுக்கட்டமைப்பு விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அரச சமாதான செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையிலுள்ள பிற்போக்குவாத குழுவினர் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு தடையாக இதுவரை காலமும் இருந்து வந்ததாகவும், இந்தக் குழுவினரின் தடைகளையும் பெருமளவில் வெற்றி கண்ட ஜனாதிபதி இந்தியாவுக்கான தனது பயணத்தின் பின்னர் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்து சிறந்த பலன்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு முதலில் கடுமையான எதிர்ப்பினை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமே காண்பித்து வந்தது. இந்த இயக்கத்துடன் தொடர்புடைய ஜே.வி.பியினருடன் ஜனாதிபதி பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் 9 ஆம் திகதி ஜே.வி.பியினருடன் மற்றொரு கலந்துரையாடலை ஜனாதிபதி நடத்தவுள்ளார்.

பிற்போக்குவாத சிறு குழுவொன்று பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக எதிர்ப்பைக் காட்டி வந்த போதிலும், தற்போது பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த அந்தக் குழு குறிப்பிடத்தக்களவு இணைக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் விடுதலைப் புலிகள் குறிப்பிடத்தக்களவு பலமடைந்து விடுவரென இந்திய அரசாங்கம் கொண்டிருந்த எண்ணத்தை ஜனாதிபதி தனது இந்திய பயணத்தின் போது மாற்றி, வெற்றி பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்து இந்தியாவுக்கு விளக்கமளிக்க இந்திய பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி - அதனைச் சிறந்த முறையில் செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் இந்தியப் பயணம் சிறந்த பயனுள்ள பயணமாக அமைந்ததாகவும், உத்தேச பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக, பக்கம் சாரா கொள்கையினைப் பின்பற்றுவதற்கு இந்தியப் பிரதமர் உடன்பட்டுள்ளதாகவும் அரச சமாதான செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டின் பிரதியொன்றை ஜனாதிபதி சந்திரிகா - இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு வழங்கியுள்ளதாகவும் சமாதான செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஜப்பானுக்குச் சென்ற அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, ஜனாதிபதி சந்திரிகா தனது இந்தியப் பயணத்தை முடித்து நாடு திரும்பியதும் ஆச்சரியப்படத்தக்க நல்ல செய்தியொன்றை வெளியிடுவாரென அவர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(தே)

# மேற்கிந்திய அணிக்கு எதிராக பாகிஸ்தான் நிதான ஆட்டம்!



ஜமெய்க்கா—

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இனிங்ஸில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்களை எடுத்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 374 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட் இழப்புக்கு 275 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் மூன்றாவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. லாரா தனது 30ஆவது சதத்தைப் பூர்த்தி செய்த பின்னர் அவருடன் ஹின்ட்ஸ் இணைந்துகொண்டு ஆடத் தொடங்கினார். இருவரும் நிதானமாக ஓட்டங்களை எடுத்துக்கொண்டிருந்தபோது- அணியின் ஸ்கோர் 326ஆக இருந்தபோது லாராவை ஷபீர் அகமட் வீழ்த்தினார்.

233 பந்துகளில் 20 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் லாரா 153 ஓட்டங்களை எடுத்தார். இதையடுத்து ஆடவந்த பிறவுண் முதற் பந்திலேயே - அதே ஸ்கோரில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஹின்ட்ஸ் - பவல் ஜோடி இணைந்து ஆடியது. ஸ்கோர் 356ஆக இருந்தபோது - பவல் 14 ஓட்டங்களுடனும் - 385 ஆக இருந்தபோது பெஸ்ட் 18 ஓட்டங்களுடனும், 393 ஆக இருந்தபோது கிங் ஓட்டமெதையும் பெறாமலும், 404ஆக இருந்தபோது ஹின்ட்ஸ் 63 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

404 ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆட்டமிழந்தது. பந்துவீச்சில் சபீர் அகமட் 4, அப்ரிடி 3, ரசாக் 2, கனேரியா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதையடுத்து பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. சொகைப் மலிக் - யசீர் ஹமீட் ஜோடி சிறப்பாக ஆட்டத்தைத் தொடர்ந்தது. ஸ்கோர் 66ஆக இருந்தபோது யசீர் ஹமீட் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க யுனுஸ்கான் களமிறங்கினார்.

ஸ்கோர் 119ஆக இருந்தபோது பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து இரண்டு துடுப்பாட்ட வீரர்களை இழந்தது. சொகைப் மலிக் 79 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 64 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும், அசீம் கமல் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

யுனுஸ்கான் - இன்சமாம் ஜோடி சிறப்பாக ஆடி 194 ஓட்டங்கள் என்ற நிலையை எட்டிய போது - 43 ஓட்டங்களை எடுத்திருந்த யுனுஸ்கான் ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்ரிடி ஆட வந்தார்.



இன்சமாம் - அப்ரிடி ஜோடி இணைந்து ஆடி 4 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்கள் என்ற ஸ்கோரை எட்டிய நிலையில் மூன்றாம்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இன்சமாம் 64 ஓட்டங்களுடனும், அப்ரிடி 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

முதல் இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களை வீழ்த்திய கொலிமோர் நேற்றுமுன்தினமும் இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# 2011 உலகக்கிண்ண கிரிக்கெட்: பாகிஸ்தானும் நடத்த விருப்பம்!

கராச்சி—

2011இல் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை இந்தியாவுடன் சேர்ந்து நடத்த பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகளில் எதிர்வரும் 2007இல் உலகக் கிண்ண தொடர் நடைபெறவுள்ளது. இதன் பின்பு 2011இல் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறும். இந்தத் தொடரை நடத்த இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசு சர்வதேச போட்டிகளுக்கு வரிவிலக்கு அளித்துள்ளதால், போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாக கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா கூறியுள்ளார்.

இதற்கு முன் இரண்டுமுறை உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் நடந்துள்ளது.

1987இல் இந்தியா, பாகிஸ்தான் இணைந்து நடத்தின. பின்னர் 1996இல் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் சேர்ந்து நடத்தின. இதேபோல் இம்முறையும் பாகிஸ்தான் இந்தியாவுடன் இணைந்து போட்டியை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியார் கான் கூறுகையில் - ஆசிய நாடுகளில், உலகக் கிண்ணத் தொடரை தனித்து நடத்தும் தகுதி இந்தியாவுக்கு மட்டுமேயுள்ளது. சர்வதேச தரம் வாய்ந்த 27 மைதானங்கள் அங்கு உள்ளன. பாகிஸ்தான், இலங்கை பங்களாதேஷில் 5 அல்லது 6 மைதானங்கள் மட்டுமேயுள்ளன. இதனால் மிகப் பெரிய இந்தத் தொடரை எங்களால் தனித்து நடத்த இயலாது.

ஆனாலும், கடந்த இரண்டு முறைபோல இந்தியாவுடன் இணைந்து நடத்த விரும்புகிறோம். மற்ற கண்டங்களைக் காட்டிலும் ஆசியாவில்தான் கிரிக்கெட் போட்டிகளுக்கு அதிக வரவேற்புள்ளது. ஸ்பொன்சர்களும் நிறைய உள்ளன.

இதனால் தொடரை நடத்தும் வாய்ப்பு கட்டாயம் கிடைக்குமென நம்புகிறோம். இந்த மாதம் லண்டனில் நடைபெறவுள்ள ஆசிய கிரிக்கெட் சபை கூட்டத்துக்கு பின்பு இது பற்றி ஆலோசிக்கவுள்ளோம் என்றார். இந்தியாவைத் தவிர, நியூஸிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளும் உலகக் கிண்ணப் போட்டியை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளன.

# விளையாட்டு

# சிகிச்சையை முடித்த சச்சின் நேற்று மும்பை திரும்பினார்!



மும்பை—

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர், இடது முழங்கையில் ஏற்பட்ட காயத்துக்கு லண்டனிலுள்ள வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையை முடித்துக்கொண்டு நேற்று காலை மும்பை திரும்பினார்.

விமான நிலையத்தில் அவரை நிருபர்கள் சந்தித்தபோது அவர் கூறியதாவது -

எனக்கு சத்திர சிகிச்சை முடிந்தபின்பு வேகமாக குணமடைந்துவருகிறேன். இருந்தாலும் 16 வாரங்கள் வரை (4 மாதங்கள்) நான் போட்டிகளில் பங்கேற்காமல் ஓய்வெடுக்க வேண்டியுள்ளது. நான் எப்படி, எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று டொக்ரர்கள் சில ஆலோசனைகளைக் கூறியுள்ளனர். அதன்படி நடந்து வருகிறேன்.

சிறிதுகால ஓய்வுக்குப் பின்பு நான் மீண்டும் லண்டன் சென்று டொக்ரர்களிடம் செல்ல வேண்டும். அவர்கள் பரிசோதித்துவிட்டு என்ன சொல்கிறார்களோ அதன்படி நடப்பேன். இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

இந்திய அணிக்கு கிரேக் சப்பல் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளது குறித்து அவரிடம் கேட்டபோது, பதில் சொல்ல மறுத்துவிட்டார். முதலில் அவரை நான் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதன் பின்பு கூறுகிறேன் என்றார்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்துக்கு இனிங்ஸ் வெற்றி!





லண்டன்—

பங்களாதேஷுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளிடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 261 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளிடையேயான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செஸ்டர் லீ ஸ்டிரிட்டில் நடைபெற்றது.

முதல் இனிங்ஸில் பங்களாதேஷ் அணி 104 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்பின்னர் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 447 ஓட்டங்களைக் குவித்து டிக்ளேர் செய்தது.

பின்னர் 2ஆவது இனிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணி 2ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 297 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் 3ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. அப்ரப் அகமட் தொடர்ந்து நிலைத்து நின்று ஆடி ஓட்டங்களைக் குவிக்க, மறுமுனையில் நின்ற பாஸ்யா 18 ஓட்டங்களுடனும், மொர்ராசா ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்து சென்றனர்.

அப்ரப் அகமட் 82 பந்துகளில் 13 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 82 ஓட்டங்களை எடுத்தார். இதனால் பங்களாதேஷ் அணி 316 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதையடுத்து இங்கிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் ஹொகாட் 5 விக்கெட்டுக்களையும், பிளின்ரொப் 3 விக்கெட்டுக்களையும், பற்றி மற்றும் ஹார்மிசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் இரண்டு இனிங்ஸ்களிலும் 8 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஹொகாட் ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாக ட்ரெஸ்கொதிக்கும் தெரிவானார்கள். பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்து அணி இனிங்ஸ் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெயின் வீரர் நடால் பிரெஞ் ஓபன் சம்பியன்!

பாரிஸ்—

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியின் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மரியானோவைத் தோற்கடித்த - ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டி பாரிஸில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் 4ஆம் நிலை வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்), ஆஜென்ரீன வீரர் மரியானோ புயர்டாவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 19 வயதான ரபெல் நடால் 6-7, (6-8) 6-3, 6-1,7-5 என்ற செட் கணக்கில் மரியானோவை வீழ்த்தி முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

நடால் தனது முதல் பிரெஞ் ஓபன் போட்டியிலேயே சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்பு 1982ஆம் ஆண்டில் சுவீடன் வீரர் மாட்ஸ் விலான் டெர் இதேபோல் வெற்றிபெற்றுள்ளார். நடால் அரையிறுதியில் முதல்நிலை வீரர் ரோஜர் பெடரரை (சுவிற்சர்லாந்து) வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற 6ஆவது இளம் வீரர் என்ற பெருமையையும் நடால் பெற்றார்.

பெண்கள் இரட்டையர் இறுதிப் போட்டியில் விர்ஜினா ருனோ (ஸ்பெயின்), பாலா சுரெஸ் (ஆஜென்ரீனா) ஜோடி, காரா பிளாக் (சிம்பாப்வே) - லிசெல் கியூபெர் (தென்னாபிரிக்கா) ஜோடியுடன் மோதியது.

இதில் முதல்நிலை ஜோடியான அர்ஜினா - பாலா சுரெஸ் 4-6, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் 2ஆம் நிலை ஜோடி காரா பிளாக் - லிசெல் கியூபரை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.



தொடர்ந்து 6ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய விர்ஜினா ருனோ - பாலா சுரெஸ் ஜோடி 4ஆவது முறையாக பிரெஞ் ஓபன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது. இருவரும் இணைந்து 13 கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிகளில் ஆடியுள்ளனர். அதில் 8ஆவது வெற்றி இதுவாகும்.

# 100 மீற்றரில் கட்லின் சம்பியன்!

யுஜின் நகரில் நடைபெற்ற பிரிபோன்டைன் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டப் பிரிவில் அமெரிக்காவின் ஜஸ்ரின் கட்லின் (இடது) முதலிடம் பெற்றார். போட்டித் தூரத்தை இவர் 9.84 வினாடிகளில் கடந்து சம்பியனானார்.



## அறநெறிக் கல்விப் போதனைக்காக
# தனியார் கல்வி நிறுவனங்களை ஒரு நாளாவது மூடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் —

ஒருவன் பூரணமான மனிதனாவதற்கான சகல சேமிப்புக்களையும், தேட்டங்களையும் இளம் பருவத்திலேயே தேடிக்கொள்வது அவசியமாகும் என சமூகஜோதி க.கணேசதாஸன் தெரிவித்தார்.

உடுப்பிட்டி கல்யாண சுந்தர அறநெறிப் பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இளைஞர்களும், யுவதிகளும் இளமையிலேயே நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். இளமைப்பருவம் மனிதப் பண்பை வளர்க்கும் பருவம்.

இன்று இளைஞர்களாக இருப்பவர்களே நாளை இந்த நாட்டின் பொறுப்பான தலைவர்கள் ஆகப்போகிறார்கள். இவர்களின் படிப்பின் முக்கிய நோக்கம் அறிவைப் பெறுவதோடு மட்டுமல்லாது, அதன் பிரகாரம் வாழ்வாங்கு வாழ்ந்து வெற்றி பெறுவதே குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

இன்றைய பல பெற்றோர்கள் அறநெறிப் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்காது, தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்களைக் கட்டாயப்படுத்தி அனுப்புகிறார்கள். தனியார் கல்வி நிலையங்கள் ஆகக் குறைந்தது ஞாயிற்றுக்கிழமைகளிலாவது நான்கு மணித்தியாலங்கள் அறநெறிக் கல்விக்கென தமது வகுப்புக்களை மூடுவது அவசியமாகும்.

இதன் மூலம் அறநெறிக் கல்விக்கு நல்வழிகாட்டுவதோடு - மாணவர்களின் மன அமைதிக்கும், சமாதான வாழ்வுக்கும், சுபீட்சமான நிறைவுக்கும் அடிகோலுவதாக அமையும். சுயநல நோக்கோடு மட்டுமல்லாது, பொதுநல நோக்காகவும் தனியார் கல்வி நிலையங்கள் சேவையாற்ற வேண்டும்.

இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே இறை நம்பிக்கை, நல்ல பழக்கவழங்கங்கள், ஒழுக்கப் பண்பாடுகள் என்பன குறைந்துவிட்டன. இவற்றை மீண்டும் கடைப்பிடிக்க அறநெறிப் பாடசாலைகளே மாணவர்ளுக்கு வழி காட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். இந்த நிகழ்வு அறநெறிப் பாடசாலை அதிபர் நா. மனோன்மணி தலைமையில் நடைபெற்றது.

சமய விவகார அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், சிவத்தமிழ் வித்தகருமாகிய சிவமகாலிங்கம் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும், சீருடைகளையும் வழங்கிக் கௌரவித்தார். இந்த நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (101)

# துறைமுகத்தில் நீர் வற்றியதால் சேதமடையும் நிலையில் படகுகள்



நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேசத்தில் துறைமுகப்பகுதி தற்போதைய சோளகக் காற்றுக் காரணமாக நீர் வற்றி தரையாக காட்சியளிக்கிறது.

படகு செல்லும் பாதையில் குறைந்தளவு நீர் இருப்பதால், படகுகள் தரைதட்டி சேதமடைகின்றன. இதேவேளை, காலை நேரத்தில் குமுதினி படகு சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை.

ஒவ்வொரு வருடமும் இந்த நிலை தொடர்கின்றபோதும், இது தொடர்பாக கடல் ஆழமாக்கல் சம்பந்தமான ஆக்கபூர்வமான பணிகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை.

கடந்த மாதம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இந்தப் பகுதியை ஆழமாக்கல் தொடர்பாக ஆராய்ந்ததுடன், அவர்களது பணியும் நின்றுவிட்டதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (113)

# சங்கானைப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

சங்கானை —

சங்கானை சந்தைப் பகுதியில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துச் செல்கின்றன. குறிப்பாகக் கிழமைநாட்களில் வங்கி, சந்தை மற்றும் ஏனைய காரியாலயங்கள் போன்றவற்றுக்குவரும் பொதுமக்களின் சைக்கிள்கள் களவுபோகும் சம்பவங்கள் அடுத்தடுத்து இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

மரக்கறி வாங்குவதற்காக சங்கானைச் சந்தைக்குச் சென்ற குஞ்சன் கந்தையா என்பவரின் பெண்களுக்குரிய சைக்கிள் கடந்த வியாழக்கிழமை காலை 10 மணியளவில் திருட்டுப் போயுள்ளது. பூட்டிய நிலையில் இருந்தாலும்சரி, பூட்டாத நிலையில் இருந்தாலும் சரி எப்படியோ திருடர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மிக நுட் பமான முறையில் திருடிச் செல்கின்றனர்.

சங்கானைப் பொலிஸார் இவற்றைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்தும், எந்தவித பலனும் அளிக்கவில்லை. திட்டமிட்டு நடைபெறும் இந்தத் திருட்டு குறித்து பொதுமக்கள் விசனமடைந்துள்ளனர். இந்த மாதத்தில் மட்டும் ஐந்து சைக்கிள்களுக்கு மேல் இவ்வாறு திருட்டுப்போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# வருடாந்த மஹோற்சவம்

உடுவில் —

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் - எதிர்வரும் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும், மறுநாள் நண்பகல் 12 மணிக்கு இரதோற்சவமும், 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்கமும் நடைபெறும். (101)

# பொன்னாலையில் இராணுவத்தினரால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமம்!

பொன்னாலை —

பொன்னாலைப் பகுதியில் ஆடு, மாடு வளர்ப்போர் அங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பகுதியில் வாழும் அநேகமானோர் ஆடு, மாடு வளர்ப்பில் கூடுதலான அக்கறை செலுத்தி, தமது வருமானத்தைத் தேடிக்கொள்பவர்களாக உள்ளனர்.

இந்தக் கால்நடைகளை பொன்னாலை கிருஷ்ணன் கோவிலுக்குப் பின் பகுதியிலுள்ள மேய்ச்சல் நிலத்தில் மேயவிட்டு வந்தனர். இந்த மேய்ச்சல் நிலம் பாதுகாப்பு வேலிக்குள் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த பதினைந்து நாட்களாக பொன்னாலைச் சந்தியிலுள்ள இராணுவத்தினர் இந்தக் கால்நடைகளை அந்தப் பாதையினூடாக மேய்ச்சல் நிலத்துக்குக் கொண்டுசெல்வதைத் தடை செய்துள்ளனர்.

இதனால் இவற்றை வளர்க்கும் பயனாளிகள், பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு, கால்நடைகளும் உணவின்றி இருப்பதால் அவற்றினால் பெரும் பயன்களையும் இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (48)

# பாதிக்கப்பட்டோருக்கு உதவிப் பொருட்கள்!

யாழ்ப்பாணம் —

சுனாமி அனர்த்தப் பாதிப்பையொட்டி 4 நலன்புரி நிலையங்களில் உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கற்கோவளம், புனிதநகர், திக்கம், தும்பளை கிழக்கு போன்ற பிரதேசங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

துரித அபிவிருத்தி நடவடிக்கையினடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்பாட்டின்கீழ், இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு கதிரைகள், ஆடைகள் வழங்கப்பட்டதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்தார்.

# நாட்டுப்பற்றாளர் நடேசனுக்கு நெல்லியடியில் அஞ்சலி கூட்டம்

நெல்லியடி —

நாட்டுப்பற்றாளரும், ஊடகவியலாளர்களின் முன்னோடிகளில் தலைசிறந்த ஒருவருமான ஐயாத்துரை நடேசனின் ஓராண்டுச் சிராார்த்த தினத்தை முன்னிட்டு வடமராட்சி ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் அண்மையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

ஊடகவியலாளரான தவச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மாணவர் அமைப்பு பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக ஊடகவியலாளர்கள், தேசப்பற்றாளர்கள், மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றிவைத்து, மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

நினைவுரையை ஊடகவியலாளர்கள், மாணவர் அமைப்பு தலைவர், கடற்தொழில் சமாசத் தலைவர் ஆகியோர் நிகழ்த்தினர். (13)

# குமிழ் அழுகல் நோயினை ரொப்சின் மூலம் தடுக்கலாம்
## விவசாய போதனாசிரியர் தெரிவிப்பு

சுதுமலை —

பெரியவிளான், இளவாலைப் பகுதிகளில் வெங்காயத்தில் ஏற்படும் குமிழ் அழுகல் தாக்கத்தை ரொப்சின் பங்கஸ் நாசினி மருந்தை விசிறி அழிக்க முடியுமென கீரிமலை விவசாய போதனாசிரியர் க.மணிவர்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தப் பகுதிகளில் பரவும் குமிழ்அழுகல் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், தொற்றுநீக்கிய விதை வெங்காயத்தை நடுகை செய்வதுடன், ஏற்கனவே வெங்காயம் பயிரிடப்பட்டிருந்தால், ஒரு கிராம் ரொப்சின் பங்கஸ் நாசினி மருந்தை ஒரு லீற்றர் நீரில் கலந்து, 15 நாட்களுக்கு ஒரு தடவை வெங்காயத்துக்கு விசிற வேண்டும்.

புதிதாக வெங்காயத்தைப் பயிரிடுபவர்கள் 100 கிராம் ரொப்சின் பங்கஸ் நாசினி மருந்தை ஒரு லீற்றர் நீரில் கலந்து வெங்காயத்தை அதில் தோய்த்து மூன்று மணி நேரம் உலரவிட்டு பின்னர் பயிரிடமுடியும்.

இந்தப் பகுதிகளில் பரவும் வெங்காயக் குமிழ் அழுகல் நோய் தாக்கத்தைத் தடுப்பதற்கான வழி குறித்து பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனதுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரவித்தார். (44)

# கட்டாக்காலி நாய்களால் தொல்லை

யாழ்ப்பாணம் —

வலிகாம கல்வி வலயம் இராமநாதன் கல்லூரி வளாகம் ஆகியவற்றில் கட்டாக்காலி நாய்கள் அலைந்து திரிவதாகவும், சில வேளைகளில் கல்வி வலயத்துக்கு வரும் ஆசிரியர்களை கடித்துக் காயப்படுத்துவதாகவும் தெரியவருகிறது.

மருதனார்மடம், உடுவில் வீதிகளில் கட்டாக்காலி நாய்கள் அலைந்து திரிவதாலும், மோட்டார் வாகனங்களுக்கு குறுக்கே அவை செல்வதாகவும் விபத்துகள் ஏற்படுகின்றன.

இது தொடர்பாக சுன்னாகம் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (72)

# சமுர்த்தி அலுவலகம் அமைக்கப்படவில்லை

வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பாள் கிராமத்தில் சமுர்த்தி சங்க அலுவலகத்திற்கென 3 பரப்பு காணியை அந்தப் பகுதி பொதுமக்கள் அன்பளிப்பு செய்துள்ளனர்.

இந்தக் காணி அன்பளிப்புச் செய்து பல மாதங்களாகியும் சமுர்த்தி அலுவலக கட்டடம் அமைக்கப்படவில்லையென பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி அலுவலக கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, சம்பந்தப்பட்டவர்களிடம் அந்த ஊர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை மூன்று



பெயர் : ர.சாஹுயா
முகவரி : கம்பர்மலை










# 'இடி அமீன்' தத்துவெட்டி



தத்துவெட்டிகளில் அல்பைன் தத்துவெட்டி (**Anonconotus alpinus**) என்ற இனம் பாலியல் நடத்தையில் இடி அமீனுக்கு எந்த விதத்திலும் சளைத்ததல்ல என, சுவிஸ் டேர்பி பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. ஒவ்வொரு 18 செக்கனுக்கு ஒரு தடவை இதனால் பெண் பூச்சிகளுடன் இனக்கலப்பு (Mate) செய்ய முடியும். இனக்கலப்பின் போதும், ஏனைய பூச்சிகள் போலல்லாது கொடூரமாக நடந்துகொள்ளும். இதனால் பெண்பூச்சிகள் காயமடையவும் நேரிடுகிறது.

தன்னைக் கடந்துசெல்லும் எந்தப் பெண் தத்துவெட்டியையும் தனது கொடுக்கினால் பிடித்து, தனது லீலையை ஆரம்பித்துவிடும். இந்த அல்பைன் தத்துவெட்டி ஒரு சில செக்கனுக்குப் பின்னர் மீண்டும் கலப்பிற்குத் தயாராகிவிடக்கூடியது.

பொதுவாகப் பூச்சிகள் காதற்பாடல்கள் மூலமே எதிர்பாலாரைக் கவர்ந்து எச்சரிக்கையாக 'தம்மினம்' என உறுதி செய்த பின்பே இவை கலப்பில் ஈடுபடும்.

ஆனால் அல்பைன் தத்துவெட்டிக்கு இதுவெல்லாம் பொருந்தாது. அது எந்தப் பெண் தத்துவெட்டி மீதும் ஏறத் தயாராகவே காத்திருக்குமாம்.

# புதிய மின், ஒட்சிசன் பிறப்பாக்கி அறிமுகம்



சத்திர சிகிச்சையின்போது திடீரென ஏற்படும் மின்தடைகளின்போது தானே இயங்கக்கூடிய எளிய மின் மற்றும் ஒட்சிசன் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றை, டொக்டர் ரோஜர் எல்றிங்ஹம் என்பவர் வியட்நாமில் அறிமுகம் செய்துள்ளார். இத்தகைய நவீன கருவிகள் ஏற்கனவே அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்தபோதிலும், இவற்றின் பயன் - மூன்றாம் உலக நாடுகளின் தேவையைப் பூர்த்திசெய்வதாக இல்லை.

எனினும் இந்தக் கருவி மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொருத்தமானவை என இவர் கூறுகிறார். இதன் விலையும் மேற்கத்தைய இயந்திரங்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகவுள்ளது.

# ஆண்களுக்கு ஆபத்தாகும் பிளாஸ்டிக் சேர்வை



நமது தினசரிப் பாவனைப் பொருட்களில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களுடன், இனப்பெருக்கத் தொகுதியை - ஆண் குழந்தைகளில் பாதிப்படையச் செய்யும் என ரொச்செஸ்டர் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று கூறுகிறது. **Phthalates** எனும் பதார்த்தம் பிளாஸ்டிக் பொருட்கள், வழுக்கி எண்ணெய்கள், அழகு சாதனப் பொருட்கள், விளையாட்டுச் சாதனங்கள், நிறமூட்டிகள், ஷம்பூ என்பவற்றில் சேர்க்கப்படுகிறது. இது ஆண் இனப் பெருக்க ஓமோன் தொகுதியைப் பாதிப்படையச் செய்வதாக விலங்குகளில் செய்த ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த இரசாயனப் பதார்த்தம் - ஆண் உறுப்புகளின் அளவையும் பாதிப்பதாகக் கூறப்படுகிறது.

# கடலுக்கடியிலிருந்து நோய் எதிர்ப்பு ஆயுதம்

நோய் எதிர்ப்பு மருந்துகளையே எதிர்த்து நிற்கக்கூடிய கிருமிகளை அழிக்கும் சக்திவாய்ந்த பக்றீரியம் ஒன்று ஆழ் சமுத்திரத்தின் கீழேயுள்ள கடல் படுக்கையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஜப்பானியக் கடல் படுக்கையில் காணப்பட்ட இந்தப் பக்றீரியம் பிரிட்டனின் கென்ற் மற்றும் நியூகாசில் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதியவகை இனமான **Verrucosispora Maris** உற்பத்தி செய்யும் **Abyssomicin C** என்ற எதிர்ப்பு நொதியமே சக்திவாய்ந்த கிருமிகளை அழிக்கக்கூடியது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தவகை பக்றீரியாக்கள் கடலுக்கடியில் உயிர்வாழ, ஏனையவகை நுண்ணங்கிகளுடன் போரிட வேண்டியுள்ளது. இதற்குப் பாதுகாப்பு சாதனமாகவே இந்தப் பக்றீரியங்கள் இந்த நொதியங்களைச் சுரக்கின்றன.



# சிவில் யுத்தத்தால் யானைகளும் அழிவு

யானைகளுக்குப் பெயர் பெற்ற இடம் ஐவரி கோஸ்ட் என்ற மேற்கு ஆபிரிக்க நாடாகும். அங்கு நடைபெறும் சிவில் யுத்தத்தால், யானைகளும் பெரியளவில் அழிவடைந்து வருகிறது. யானைத் தந்தத்தை ஞாபகப்படுத்தும் வகையிலேயே நாட்டின் பெயரும் (Ivory Cost) என்றுள்ளது. 1980 இல் ஐவரிகோஸ்ட் எல்லையில் உள்ள ராய் காட்டில் மூவாயிரம் யானைகள் இருந்தன. 2002 இல் மீளவும் எடுத்த கணக்கெடுப்பில், நூற்றுக்கும் குறைவான யானைகளே இருந்தன. தற்போது நாட்டில் அமைதி திரும்பியுள்ளதால், யானைகளை எப்படிப் பாதுகாப்பது என்று அரசு திட்டமிட்டுவருகிறது. முன்னர் ராய் நாடு அரசபடைகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதிலும், சில சமயங்களில் இங்கு நடமாடும் ஆயுதக்குழுக்கள் தந்தத்துக்காக யானைகளைக் கொலை செய்து வந்தன.



# காசநோய் பரம்பலுக்கு மாடுகள் காரணமா?




பிரிட்டனில் காசநோய் பரவுவதற்குக் காரணம் - கட்டுப்பாடற்ற கால் நடைகளின் இடப்பெயர்வு என பிரிட் டிஷ் - பெல்ஜிய ஆய்வாளர்கள் மேற் கொண்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

முன்னர் **Badgers** எனும் ஒரு வகை கீரி இனமே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது. எனினும் எமது கண்காணிப்பிலிருந்து இப்போதைக்கு **Badgers** கீரிகளை விட்டுவிட முடியாது எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சுமார் 3 ஆயிரத்து 300 பிரிட்டிஷ் பண்ணைகளில் **bovine tuber Culosis** நோய் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## திரை விமர்சனம்

# அழுதே



இந்தப் படத்தின் கதை மிகவும் வித்தியாசமானதாக உள்ளது. எதிர்வீட்டில் வசிக்கும் ஆகாஷ் - மதுமிதா இருவரும் காதலர்கள். ஆனால் இருவர் வீட்டிலும் எதிர்ப்பு. பெற்றோர்களின் தொந்தரவு தாங்க முடியாமல் யோசிக்கின்றார்கள் காதலர்கள். ஆகாஷ் தனது முறைப்பெண் உமாவையும், மதுமிதா பிரகாஷ்ராஜினையும்



மணந்து கொள்கின்றார்கள். இவர்களுடைய திட்டம்டைவாஸ் பண்ணிவிட்டு, திருமணம் செய்வதுதான். இது நடந்ததா? இது தான் மீதிக்கதை.

ஆகாஷ் அளவாக நடித்திருக்கிறார். மதுமிதா ஒரு அழகுப் பதுமையாக வந்து போகிறார். பிரகாஷ்ராஜ் வழக்கம்போல தனது அட்டகாசமான நடிப்பால் கைதட்டல் வாங்குகிறார். காதலரின் காதலுக்குத் துணைபோகும் உமாவைப் பாராட்டியே ஆகவேண்டும்.

நகைச்சுவைக்கு வருகிறார் நடிகர் தாமு. ஆனால் அவர் சொல்லித்தான் அவருடைய நகைச்சுவை தெரிகிறது.

புதிய இசையமைப்பாளர் சுனிலினுடைய இசையிலும், சிவகுமாரின் ஒளிப்பதிவிலும் சில பாடல்கள் ரசிகர்களுடைய மனதில் நிற்கின்றன. வசனம் அன்பரசு. அவருடைய சில வசனங்கள் பளீரென்று தெறிக்கின்றன. இயக்குநர் எழிலினுடைய முடிவுதான் சற்று உதைக்கிறது. அவர் நாயகி மற்றும் நாயகன் இருவரையும் சேர்த்துத் தற்கொலை செய்யவைப்பது ஏன்?

– தர்மிலா –

# கூர்முனைக் கத்தி வேண்டாம்




கூர் முனைகளைக்கொண்ட சமயலறைக் கத்திகளைத் தடை செய்யுமாறு பிரிட்டிஷ் வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இத்தகைய கத்திகள் மூலமாகவே அநேக மான கொலைகள் நடைபெறுவதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கத்தியின் முனைகள் கூர்மையாக இருப் பதில் எந்தப் பயனும் இருப் பதாகத் தெரிய வில்லை என பிரிட்டனின் பிரபல சமை யலாளர்களும் கருத் துக் கூறுகின்றனர்.

கத்தியின் கத்தியின் வெட் டும் பகுதி கூர்மையே தேவையேயன்றி, முனை கூராக இருப்பதால், சமையலுக்கு அதில் எந்தப் பயனும் இல்லை என்கின்றனர் அவர்கள். பிரிட்டனில் 16 வயது இளைஞர்களில் 24 சதவீதமானோர் கத்திகளை உபயோகித்தே சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காவிச்செல்லும் காரில் பொருத்தும் கழிப்பறைக்கூடம்!



காவிச்செல்லக்கூடிய [Portable] காரினுள் பொருத்தக்கூடிய கழிப்பறை ஒன்றை பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று அறிமுகம் செய்துள்ளது. நோயாளர்கள், குழந்தைகள் காரில் பயணிக்கும்போது, இது அவர்களுக்கு உதவியாக



இருக்கும் என்று கூறப்படுகிறது. பாவிக்காத வேளையில் இந்த கழிப்பறையை சூட்கேஸ் போன்று மடித்து வைக்கலாம். 8 கிலோ நிறையுடையதாக இது அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கழிப்பறைத் தொட்டியினுள் உள்ள ஓர் இரசாயனப் பதார்த்தம் – மனிதக்கழிவை அழித்து திரவமாக்குவதுடன், துர்மணம் நீக்கி நல்ல வாசனையையும் பரப்பக்கூடியது. பயண முடிவில் எஞ்சியிருக்கும் இந்த நீரை வெளியில் அகற்றி விடலாம். 8 நாட்களுக்கு இதைத் தொடர்ந்து பாவிக்கமுடியும். சிறுவர்களுக்காகவே இதைத் தயாரித்தபோதிலும், எதிர்பாராத வகையில் இது நோயாளிகளுக்கும் உதவுவதாக கூறும் இதன் பிரிட்டிஷ் தயாரிப்பாளர்கள் – அண்மையில் தமக்கு அவுஸ்ரேலியாவிலிருந்து இதற்கான கொள்வனவுக் கட்டளையொன்று கிடைத்ததாகவும் நபர் ஒருவர் தனது மனைவியின் பிறந்தநாள் பரிசாக வழங்கவே இதைக் கொள்வனவு செய்ய விரும்புவதாகவும் கூறினார்.

# புதிய செஸ் வீரன்!



சதுரங்கம் விளையாடும் நவீன சுப்பர் கம்பியூட்டர் ஒன்று தற்போது சதுரங்க (Chess) வீரர்களை ஆட்டிப் படைக்கிறது.


**Hydra** என்ற இந்தக் கம்பியூட்டர் - 32 இணைப்புகளுடன் கூடிய ஓர் மூளையைக் கொண்டு இரத்தமும், சதையுமாக உள்ள மனித மூளைக்கு சவால் விடுகிறது. ஒரு செக்கனில் இந்த **Hydra** 200 மில்லியன் சதுரங்க நகர்வுகள் குறித்து ஆலோசித்து முடிவுசெய்கிறது. அடுத்த 40 கட்டங்களை முற்கொண்டே முடிவு எடுக்கிறது.

1996 ஆம் ஆண்டில் ஐ.பி.எம் கம்பியூட்டருடன், ரஷ்ய சதுரங்க மலை கரிகஸ்பரோவ் தோல்வியடைந்தமை மனிதனை இயந்திரம் விஞ்சிவருவதைக் காட்டியது. **Hydra** இதுவரை பிரபல சதுரங்க வீரர்களுடன் எட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு, அதில் வென்று இரண்டைச் சமன் செய்துள்ளது.

# வயகரா பாதிப்பு தொடர்ந்து ஆராய்வு

வயகரா பாவனை கண்பார்வையைப் பாதிக்குமா என்பது குறித்து, தற்போது அமெரிக்க மருத்துவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இதுவரை வயகரா பாவனையால் இதய மற்றும் நீரிழிவு நோயாளிகள் 50 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும், கண்பார்வை பாதிப்புக்கு வயகரா காரணமா என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

1998 இல் வயகரா பாவனைக்கு வந்த பின், உலகம் எங்கிலும் 20



மில்லியன் பேர் இதைப் பாவித்துவருகின்றனர். வயகராவைத் தயாரிக்கும் **Pfizer** நிறுவனம் - தமது வயகரா மீது ஒட்டும் எச்சரிக்கை லேபலின் வடிவத்தை மாற்றத்திட்டமிட்டுள்ளது.

# உயிரின அழிவு ஆபத்தை நோக்கி...!




உயிரினங்கள் உலகிலிருந்து தற்போது அருகிவரும் வேகம் இதே போன்று தொடர்ந்தால், எதிர்காலத்தில் அவை மட்டுமல்ல, மனிதனும் இல்லாதொழிய வேண்டியேற்படும் என, மிலேனியம் எகோசிஸ்டம் அசஸ்மென்ட் எனும் ஆய்வகம் எச்சரித்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக 95 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 300 ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வைத் தொடர்ந்து, இந்த இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஊர்வனவற்றில் மூன்றுக்கு ஒரு உயிரியும், விலங்கில் ஐந்துக்கு ஒன்றும், பறவைகளில் எட்டுக்கு ஒன்றும் அழியும் நிலையிலுள்ளன. 90 வீத பாரிய மீன் இனங்களும் அழிவடைந்து வரும் ஆபத்தைச் சந்தித்துள்ளன. கடந்த 50 ஆண்டுகளிலேயே உயிரிகள் பெருமளவில் அழிவைச் சந்தித்து வருவதாக இந்த ஆய்வு கூறுகிறது.

# யோகர்சுவாமி ஞாபகார்த்த முதியோர் இல்லத்தில் நீர்ப்பாசன நலன்புரி சங்கத்தால் சிரமதானப்பணி





கிளிநொச்சி—

கிளிநொச்சி - வன்னேரிக் குளம் ஐயனார்புரம் பிரதேசத்தில் யோகர் சுவாமிகள் ஞாப கார்த்த முதியோர் இல்லத்தில் சிரம தானப்பணி அண்மையில் நடை பெற்றது.

இந்தச் சிரமதானப் பணி கிளி நொச்சி நீர்பாசனத் திணைக்கள நலன்புரிச் சங்கத்தின் அனு சரணையுடன் இடம்பெற்றது.

இதுகுறித்து கிளிநொச்சி நீர்பாசனத் திணைக்கள நலன் புரிச்சங்கத்தின் தகவல்தருகையில்-

எமது நலன்புரிச் சங்கத்தின் நோக்கமே எமக்கும், எம்மை சூழவுள்ளவர்களுக்கும் இயலு மான உதவியை செய்து கொடுப் பதுதான். ஒவ்வொரு வருடமும் இவ்வாறான சிரமதானங்கள் செய்வது வழக்கம். இம்முறை சற்று வித்தியாசமான முறையில் இலை மறை காயாக இருக்கும் ஐயனார்புரம் முதியோர் இல் லத்தில் சிரமதானம் செய் வதுடன், வாழ்க்கையின் விளிம் பில் உறவுகளை இழந்து, முதுமை அடைந்துள்ள எமது மூதாதையருடன் ஒரு நாளி னைக் கழிப்பது எமது பெற்றோ ருக்கு செய்யவேண்டிய செய்யத் தவறிய கடமையை செய்த திருப்தியும், அவர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்கள் உணர்வுகளைப் பகிர்ந்து சந் தோசமான உறவுகளுக்கு இட்டுச் செல்வதற்கு சமைக்கும் என்ற நோக்கமே இந்த சிரமதானத் தின் முக்கிய நோக்கமாகும்.

இங்கு ஆண்கள், பெண்களுக் கான மலசல கூடத்திற்கும் அரு கில் சிறிய இரு நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டு, நீர்தாங்கியி லிருந்து குழாய்கள் மூலம் நீர் எடுப்பதற்கான வசதியும், அங்கு பேணப்பட்டு வரும் கோப்பித் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவதற் கான வசதியாக குழாய் நீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. இதற்கான கல், சீமெந்து போன்ற தேவையான பொருட்களை எமது திணைக்களப் பணியாளர் களே கொண்டு சென்றதுடன், இந்தப் பணிகளை அவர்களே செய்து முடித்தனர் என மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சிரமதான பணியில் 120 பணியாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓவியர் புகழேந்தியின் ஓவிய மதிப்பரங்கு!

கிளிநொச்சி—

தமிழக ஓவியர் புகழேந்தி யின் ஓவிய மதிப்பரங்கு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில், கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் குரு குலராஜா தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கல்விக் கழகப் பொறுப் பாளர் வெ.இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் மதிப் புரையை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் நிகழ்த் தினார்.

அவர் தனது உரையில் - ஓவி யர் புகழேந்தி ஓவியங்கள் வர லாற்றுச்சின்னங்களாகப் பேணிப் பாதுகாக் கப்படவேண்டியவை. அவருடைய ஓவியங்கள் மக்கள் தாங்கி நிற்கின்ற துன்பங்களை வெளிப்படுத்துபவையாக, உணர்வுபூர்வமாக வரையப் பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் மதிப்புரையை ஓவியர் நிலாந்தன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை வெ.பாலகுமாரன் நிகழ்த் தினார்.

இதனைத் தொடர்ந்து கிளி நொச்சி அரச அதிபர் தி.இராச நாயகம் புகழேந்திக்கு சின்னம் பொறித்த நினைவுப் பரிசு கொடுத்து கௌரவிக்கப் பட் டது. (நி)

# 260 மில்லியன் ரூபா நிதியுதவி

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டின் அபிவிருத் திக்கான நியாப் திட்டத்திற் கென 260 மில்லியன் ரூபாவை உலக வங்கி வழங்கியுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் 36 மில்லியன் ரூபா செலவில் குளங்கள், நீர்ப்பாசன வாய்க்கால் கள், விவசாயிகளின் அடிப்படைத் தேவைகள் என்பன புனரமைக் கப்பட்டுள்ளன.

# பேரினவாதிகளின் அடாவடித்தனத்தைக் கண்டித்து கிளிநொச்சி தேசிய எழுச்சிப்பேரவை அறிக்கை!

கிளிநொச்சி—

தமிழர் தலைநகரம் திரு கோணமலையில் சிங்கள பேரின வாதிகளாலும், காடையர்களா லும் முற்றிலும் சட்டத்துக்கு முரணானவகையில் நகரின் மத்தியில் இரவோடு இரவாக நிறுவப்பட்ட புத்தர்சிலையும், அதனைப் பாதுகாக்கும் வகை யில் சிங்களக் காடையர்களைக் கொண்டும், அரச பயங்கரவாதி களைக்கொண்டும் பாதுகாக்கும் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என, கிளி நொச்சி தேசிய எழுச்சிப் பேரவையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படு கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ் மக்களையும், தமி ழர்களின் தேசிய தலைமையை யும் கடும் சினம் ஊட்டி, மீண் டும் போருக்கு வலிந்து இழுப்ப தாகவே நாம் கருதுகிறோம்.

அத்துடன் இவ்வாறான செயல்கள் மூலம் எமது தலை நகரத்தில் சிங்களக் குடியேற்றங் களை நிறுவி எம்மை முகவரி யற்ற மக்களாக மாற்ற ஜே.வி.பி பேரினவாத காடையர்களும், தம்மைப் புத்தரின் சீடர்களெனக் கூறிக்கொள்ளும் காவியுடை யணிந்த காடையர்களும் முயற் சிப்பதை எம்மால் பரிபூரணமாக அறிய முடிகின்றது.

இந்தப் போர்நிறுத்த உடன் படிக்கை அமுலில் உள்ள வேளை யில்- இவ்வாறான அத்துமீறும் சம்பவங்களும், எமது போரா ளிகள் மீதும், தமிழ் ஊடகவிய லாளர்கள் மீதும், அப்பாவி மக் கள் மீதும் படுகொலைகள் நடப் பதை நாம் தொடர்ந்தும் பொறு மையாகப் பார்த்துக்கொண் டிருக்க முடியாது.

எனவே நாம் இந்தச் செயற் பாடுகளை வன்மையாகக் கண் டிக்கும் அதேவேளை, தமிழீழத் தேசியத் தலைவரின் கொள்கை இலட்சியமாம் தமிழீழத் தாயகம் என்னும் கோட்பாட்டுக்குச் செவிசாய்த்து, தேசியத் தலை மையின் கீழ் அணிதிரண்டு, எமக் கான தாயகத்தை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி கிடை யாது என்பதை சிங்களப் பேரின வாதம் தொடர்ந்தும் எமக்குத் தெளிவுபடுத்தி வருகிறது.

எனவே நாம் காலம் தாழ்த் தாது தமிழன் என்று கூறிக் கொள்ளும் ஒவ்வொரு குடிம கனும் பேரினவாதத்துக்கு எதி ராகக் கிளர்ந்து எழுந்து, எமது தமிழீழத் தாயகத்தை அமைக்க முன்வருமாறு வேண்டுகின் றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கியூடெக் - கரிதாஸ் நிறுவனங்களால் மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு வள்ளங்கள்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் தொழில் நடவடிக் கைகளை மேம்படுத்தும் முக மாக 50 வள்ளங்கள் வழங்கப் பட்டன.

கியூடெக் மற்றும் கரிதாஸ் நிறுவனங்கள் இணைந்து இந்த வள்ளங்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட 11 மீனவ கூட்டுறவு சங்கங் களுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு முல் லைத்தீவு மாவட்ட கடற்தொழி லாளர் கூட்டுறவு சங்க சமாசத் தில் வன்னிப் பிரதேச கியூடெக் நிறுவன பணிப்பாளர் தலைமை யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் கருத் துத் தெரிவிக்கையில்-

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிர தேசங்களின் அபிவிருத்திக் கென கியூடெக் மற்றும் கரிதாஸ் நிறுவனங்களால் வழங்கப்பட் டுள்ள இந்தப் படகுகளைப் பயன் படுத்தி மீனவர்கள் தமது தொழில் நட வடிக்கைகளை மேம்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண் டார்.

இந்த மாவட்டத்தில் சுனாமி யால் பாதிக்கப்பட்ட மீனவர் களின் நன்மை கருதி, 400 வள் ளங்கள் வழங்குவதற்கு இந்த நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதில் முதல் கட்டமாக 50 வள்ளங்கள் வழங்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் - 07

632 : இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்தவரும், உருவ வழி பாட்டை ஒழித்து, ஒரே கடவுள் அல்லாஹ்தான் என்று போதித்தவருமான நபிகள் நாயகம் முகம்மது, இவ்வுலகை விட்டு மறைந்தார்.

1329 : சிலந்தி மூலம் பாடம் கற்ற வரலாற்றுப் புகழ்பெற்ற ஸ்கொட் லாந்து மன்னர் ரொபர்ட் புரூஸ், தொழுநோய் காரணமாக மரணமானார்.

1882 : வெள்ளிக்கிரகம் பூமிக்கும், சூரியனுக்கும் இடையே கடந்து சென்றமை முதன் முதலாக அவதானிக்கப்பட்டது. சூரி யனை மையமாகக் கொண்ட சுற்றுவட்டப் பாதையில் வெள்ளிக்கிரகம் பயணித்துக்கொண்டு இருக்கையில், 120 வருடங்களுக்கு ஒருமுறை இவ்வாறு நிகழ்வதுண்டு.

1905 : ஸ்வீடனது ஆதிக்கத்தில் இருந்து பிரிந்து, விடுதலை அடைந்த தாக நோர்வே நாடாளுமன்றமான "ஸ்டோர்டிங்" அறி வித்தது. ஸ்வீடன் டென்மார்க்கிடம் இருந்து 1814 இல் நோர்வேயைப் பெற்றுக்கொண்டு தனது நாட்டுடன் இணைத்துக்கொண்டிருந்தது.

1917 : ரஷ்யாவில் விவசாயிகள் பேரவை கூடியது. இழப்பீடு எதுவும் இல்லாமல் உழுபவருக்கே நிலங்களை மாற்றிக் கொடுக்கும் தீர்மானம் இங்கு நிறைவேற்றப்பட்டது.

: அமெரிக்கா 25ஆயிரம் போர் விமானங்களைத் தயாரித்து முடித்துள்ளதாக அறிவித்தது.

1918 : நீர்மூழ்கிக் கப்பல்களை வேட்டையாடக்கூடிய 36 அமெரிக்க வேட்டை நீர்மூழ்கிக் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் கொர்ஃபூ என்னுமிடத்துக்கு வந்து சேர்ந்தன.

1940 : நோர்வே மீது ஜேர்மனி தாக்குதலைத் தொடுத்தது. நோர்வே மன்னரும், அரச பிரதானிகளும் இங்கிலாந்துக்குத் தப்பிச் சென்றனர்.

1944 : பெல்ஜியம் மன்னர் லியோபால்ட் கைதுசெய்யப்பட்டார்.

1945 : ஜப்பானின் மிகப்பெரிய தொழில் நகரமான "ஒஸாகா" மீது அமெரிக்க "சுப்பர் ஃபோர்ட்ரஸ்" விமானங்கள் தாக்குதலைத் தொடங்கின.

1946 : இத்தாலியில் நடைபெற்ற பொதுவாக்குக் கணிப்பில் மன்னராட்சியை எதிர்த்து பெருமளவு மக்கள் வாக்களித்தமையைத் தொடர்ந்து, நாடெங்கும் பெரும் கலவரம் ஏற்பட்டது.

1954 : கணினிக் கோட்பாட்டின் முன்னோடியும், முதன் முதலாக கணிக்கும் இயந்திரத்தை வடிவமைத்தவரும், புகழ்பெற்ற கணக்கியல் அறிஞருமான பிரிட்டனைச் சேர்ந்த ஆலன் மாத்தி சண்டூரிங் காலமானார்.

1964 : சிற்பாசிரியர் யாழ்.திருநெல்வேலி ஆறுமுகம் ஆச்சாரியார் காலமானார்.

1965: மொரோக்கோ மன்னர் ஹஸன் சர்வாதிகார ஆட்சியை நடத்தப்போவதாக அறிவித்தார்.

1966 : புகழ்பெற்ற ஜேர்மனி - பிரான்ஸ் சிற்பியும், ஓவியரும், கவிஞருமான ஹான்ஸ் ஆர்ப் காலமானார்.

1979 : ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கான முதல் தேர்தல் நடைபெற்றது.

: பூமியின் வள ஆய்வுக்காக இந்தியாவின் பாஸ்கரா - 1 என்ற செயற்கைக்கோள், ரஷ்யாவில் காடிஸ்தான்யார் ஏவுதளத்தில் வைத்து, சி - 1 இடர்காஸ்மாஸ் என்ற ரஷ்ய ஏவுகலம் மூலம் செலுத்தப்பட்டது.

1981 : ஈராக்கின் பாக்தாக் அருகே கட்டுமான வேலைகள் முடிவடையும் நிலையில் இருந்த அணு உலையை இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியழித்தன.

1983 : ரஷ்யா வெனீரா - 16 என்ற விண்கலத்தைச் செலுத்தியது. இது வெள்ளிக் கிரகத்தின் துருவப் பகுதியைச் சுற்றிவந்து, அந்தப் பகுதியின் துல்லியமான படங்களைப் பூமிக்கு அனுப்பிவைத்தது.

1989 : கிளிநொச்சி, திருமலை ஆகிய பகுதிகளில் ரூபன் என்ற பெயரிலான படை நடவடிக்கையை இந்திய இராணுவம் தொடக்கியது.

1990 : இந்தியாவும், பாகிஸ்தானும் வாகா எல்லைச் சாவடியில் கைதிகளைப் பரிமாறிக்கொண்டன. இதன்படி இந்தியா 25 கைதிகளை பாகிஸ்தானிடம் கொடுக்க, பாகிஸ்தான் 58 கைதிகளை இந்தியாவிடம் ஒப்படைத்தது.

1992 : புவி வள பாதுகாப்பு நிதியை உருவாக்க வளர்ந்த நாடுகள் உதவிபுரிய வேண்டும் என்று உலக வங்கி வேண்டுகோள் விடுத்தது.

1993 : தென்னாபிரிக்கா மகாத்மாகாந்தியின் முத்திரையை வெளியிட்டது. இது மகாத்மாகாந்தியின் முத்திரையை வெளியிட்ட 43 ஆவது நாடாகும்.

தொகுப்பு - சந்துரு

# சுனாமியால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு தமிழீழ வைப்பகத்தில் 5 ஆயிரம் ரூபா வைப்பில்

மருதங்கேணி—

சுனாமி அனர்த்தத்தால் பெற் றோரை இழந்த 26 சிறுவர்களுக்கு மருதங்கேணி பிரதேச நலன் விரும்பிகளால் தலா 5 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை மருதங்கேணி இந்து வித்தியாலய அதிபர் ம.நவநீதமணி தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் 5 ஆயிரம் ரூபா வீதம் தமிழீழ வைப்பகத்தில் பணம் வைப்பில் இடப்பட்டு, வங்கிப் புத்தகங் கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடற்புலி களின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் செஞ்சேகரன், நீதித்துறையைச் சேர்ந்த சி.தாய கன், கடற்புலிகளின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் நிலவன், பொதுமக்கள் எனப் பெருமள வானோர் கலந்துகொண்டனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## உச்சக்கட்டத்தில் இராஜதந்திர யுத்தம்

நாளுக்குநாள் சமாதானப் புறாவின் கழுத்தில் போடப்பட்டுள்ள சுருகுதடமானது மெல்லமெல்ல அரசதரப்பினரதும், படைத்தரப்பினரதும் நடவடிக்கைகள் காரணமாக இறுகிக் கொண்டே போகின்றது.

மீண்டும் ஒரு போருக்கான சூழலை உருவாக்கி தற்போது தன்னை நாலாபுறமும் அழுத்திக் கொண்டிருக்கும் உள்ளக மற்றும் சர்வதேச நெருக்கடிகளிலிருந்து தப்பிக் கொள்ள முனையும் மூலோபாயத்துடன் ஜனாதிபதி சந்திரிகா அரசியல் சதுரங்கத்தில் காய்நகர்த்தல்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

ஆனால், இந்தக் காய்நகர்த்தலில் அவரின் தந்திரோபாய உத்திகள் அவருக்கு சாதகமான சூழலை உருவாக்குமா என்பது குறித்து எத்தகைய எதிர்வுகூறல்களையும் இப்போது கூறமுடியாவிட்டாலும், தற்போது அவர் எதிர்கொள்ளவேண்டியதாகவுள்ள சவால்களை சமாளித்துக்கொண்டு அந்தக் கட்டத்தை நோக்கி நகர்வுகளை மேற்கொள்வதென்பது அவ்வளவு சுலபமாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயமாகும்.

சமாதான முயற்சிகளில் அவரது அணுகுமுறைகளின் நேர்மையீனமும், நியாயமற்ற உத்திகளும் அமைதிப்பேச்சுக்களின் எதிர்காலத்தை முற்றாக கேள்விக்குறியாக்கியுள்ள சூழலில், அவரால் சர்வதேசசமூகத்தின் ராஜரீகரீதியிலான அழுத்தங்களை அல்லது அறிவுறுத்தல்களை மீறி மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கமுடியுமா என்பதே இப்போதைய கேள்வியாகும்.

ஆனாலும் சமாதானத்தை சாத்தியமாக்கும் திராணியோ, மனோபாவமோ அற்ற இன்றையசூழலில் யுத்தமொன்று ஏற்பட்டால் மட்டுமே தனது அரசியல் நெருக்கடிகளிலிருந்து தபபிக்கொள்ளலாம் என்ற நிலையே ஜனாதிபதிக்கு உள்ளதால யுத்தத்தை தானே தொடங்காது விடுதலைப்புலிகளை சீனமேற்றி அவர்களை போர்க்கோலம் கொள்ளவைக்கும் தந்திரோபாய உத்தியையே கையாளத்தொடங்கியுள்ளார் என்பது வெளிப்படையாகும். ஜனாதிபதி வகுக்கும் இந்த அரசியல் வியூகப்பொறி விடுதலைப்புலிகள் அறியாத ஒன்றல்ல.

இங்கேதான் யுத்தநிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் ஆரம்பமான இராஜதந்திர ரீதியிலான யுத்தம் அதன் மிக முக்கியமான கட்டத்தினை எட்டி இருக்கின்றதெனலாம்.

ரணில் விக்கிரமசிங்க தனது அரசுக்காலத்தில் இந்த இராஜதந்திர யுத்தத்தினை கையாண்ட முறைவேறு. சந்திரிகா இப்போது கையாளும் முறைவேறு. அவர் கைகுலுக்கிப் பேசிக்கொண்டே காலுக்குக்கீழ் குழிபறிக்கும் உத்தியையும் கையாளமுயன்றார். இவரோ கைகுலுக்கமுனைவது போன்று பாசாங்கு செய்துகொண்டே கழுத்துக்கு சுருகுடம் போட முனைந்து வருகிறார். எந்தவகையில் பார்த்தாலும் இருவரது அணுகுமுறைகளுக்கும் உள்ள வித்தியாசம் கொழுக்கட்டைக்கும் மோதகத்திற்கும் உள்ள வேறுபாடளவுதான். இன்று பொதுக கட்டமைப்பு விவகாரம், புத்தர் சிலை விவகாரம் என அல்லோல கல்லோலப் பட்டுவரும் பிரச்சினைகளுள் சிக்கித்திணறும் அரசினதும், ஜனாதிபதியினதும் தேசிய நலனில் அக்கறையற்ற - சுயநலப்போக்கின் காரணமாகவே எந்த ஒருபிரச்சினைக்கும் தீவுகாண முடியாத அவலநிலை உருவாகி யுள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கொள்ள - இவற்றிலிருந்து மக்களையும், சர்வதேச சமூகத்தையும் திசைதிருப்பிவிட இதனை விடவும் மோசமான மாற்றுப் பிரச்சினை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் அரசுக்கு- அதாவது அதிகார வலுமிக்க ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

அந்த மாற்றுப் பிரச்சினையாக யுத்தம் மட்டுமே இருக்க முடியும் என்றே ஜனாதிபதி கருதுகின்றார். அவ்வாறே அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய பேரினவாத சக்திகளும் நம்புகின்றன.

அரசு போரை ஆரம்பித்தால் எல்லோரும் விடுதலைப் புலிகள் பக்கம் நின்று நியாயம் பேசக்கூடிய சூழல் உருவாகிவிடும் என்ற அச்சம் ஜனாதிபதிக்கும், பேரினவாதிகளுக்கும் உண்டு.

எனவே, புலிகளே சினம்கொண்டு போரைத் தொடங்கும் சூழல் ஒன்றை உருவாக்குவதற்கான புலிகள்மீதான சீண்டல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

கிழக்கில் இராணுவப்புலனாய்வுப் பிரிவின் நெறிப்படுத்தலில புலகள் இயக்க உறுப்பினர், ஆதரவாளர்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் கொலைகள் தொடர்வதும் ...

திருமலை புத்தர் சிலை விவகாரத்தை மற்றொரு இனக் கலவரத்தை உண்டுபண்ணுவதற்கான பொறியாக்க முயல்வதும்...

புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத் உடன்பாட்டை படைத்தரப்பினர் மீறி செயற்பட்டுவருவதும், போராளிகளுக்கான பயண ஒழுங்குகளுக்கான பாதுகாப்பினை - ஏனைய ஒழுங்குகளை செய்ய மறுப்பதும்...

இன்னோரன்ன இது போன்ற சீண்டல் நடவடிக்கைகளும புலிகளுக்கு சினமூட்டி போர்நிறுத்தத்தை அவர்கள் மீறிச் செயற்படவைக்கும் சதி உத்திகளின் அடிப்படையிலான செயற்பாடுகளேயாகும்.

புலிகளின் பொறுமையை எல்லை மீறி சோதித்தால் அவர்கள் போர்ப்புலிகளாக விடுவர் என்றே அரசு நம்புகிறது.


இந்த இராஜதந்திர அணுகுமுறையே சமாதானப்புறாவின கழுத்தில் அரசால் போடப்பட்டுள்ள சுருகுதடமாக மாறியுள்ளது.

புறா மிரள்கிறது, சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கிறது...

போரா... சமாதானமா ... என்பதை தீர்மானிப்பதும், செயற்படுவதும் அரசாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதில் அரசின் எந்த முடிவையும் ஏற்கவும், எதிர்கொள்ளவும் தயார் என புலிகள் எப்போதோ வெளிப்படையாகக் கூறிவிட்டார்களல்லவா?

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தரையில் நடப்பதை தடுக்க வழியில்லை வான்படை பற்றி வாய்பிளந்தென்ன?

தர்மதுவீபம் என்றழைக்கப்பட்ட இலங்கை இப்பொழுது கொலைகள் மலிந்த பூமியாக மாறிக்கொண்டிருக்கிறது. கொலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பாதுகாப்புப் படைகளும் அரசாங்கமும் புலிப்பயங்கரவாதம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றன. ஆயுதம் ஏந்தி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கெதிராகக் கிளர்ச்சி செய்தவர்கள் இன்று புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டுமென்று சொல்கிறார்கள். இவர்கள் ஆயுதம் ஏந்திச் செய்த கொலைகளை மறைப்பதற்காக புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்று கூச்சலிடுகிறார்கள். இவர்கள் கையிலெடுத்த ஆயுதங்களைக் கீழே போட்டார்களா? என்று சொல்லிக் கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

பாதுகாப்புப் படைகளும் அரசாங்கமும் கொலைகளை நிறுத்தவும் தடுக்கவும் முயற்சி செய்யவேண்டியது ஒருபுறமிருக்கட்டும். அரசியல்வாதிகளுக்கும் ஆன்மீகவாதிகளுக்கும் இதில் பொறுப்பில்லையா என்று கேட்டேன்.

இப்பொழுது எது நடந்தாலும் எல்லாவற்றையும் புலிகள் மீதே சுமத்திப் பழியைப் போட்டுவிட்டு அயல் நாட்டுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதில் தான் ஆன்மீகவாதிகளும் அக்கறை காட்டுகிறார்கள் என்றார் பரமசிவம்.

பயங்கரவாதத்தை அடக்குவதற்காகவும், பயங்கரவாதிகளை அழிப்பதற்காகவும் தேசபக்தி உள்ள இளைஞர்களை அவர்களின் குடும்ப பாரம்பரியங்களை ஆராயாமல் குறைந்த கல்வித் தகமையுடன் ஆட்சிக்கு வந்தவர்கள் படைகளுக்குத் திரட்டினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண இந்த இளைஞர்களைப் படைகளில் சேர்க்க சிபார்சு செய்தார்கள். சுடுவதற்கும், குண்டெறிவதற்கும் பயிற்சி பெற்ற இவர்கள் தமிழர் தாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளமுடியாத அந்த இளைஞர்கள் போர்நிறுத்த காலத்திலும்கூட படைகளை விட்டு ஓடித்தப்புகின்றனர். இவர்களில் பலரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதங்களுடன் தப்பி ஓடிவிட்டதாகச் செய்திகள் வெளிவந்தன என்றேன்.

இதுமட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களாக விருந்தவர்களுக்கு பாதுகாப்புக்காக முன்பு வழங்கப்பட்ட துப்பாக்கிகள் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. படையினருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகள், குண்டுகள் எல்லாம் கணக்கு வைக்கப்பட்டதா என்பதும் தெரியவில்லை. சமீபத்தில் முன்னாள் படைத்தளபதி ஒருவர், மலிவு விலையில் பல்வேறு ரகத் துப்பாக்கிகளை வெளியில் சுலபமாக வாங்கமுடியுமென்று தெரிவித்திருந்தார். மொத்தத்தில் பெருந்தொகையான ஆயுதங்கள் சட்டவிரோதமாக நாட்டில் உலாவுகின்றன! கொலைகள் மட்டுமல்ல ஆயுதமுனையில் கொள்ளைகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இரவில் வீடு புகுந்து திருடுவதும் அதிகரித்து வருகிறது என்று பரமசிவம் சொன்னார்.

மொத்தத்தில் இலங்கை இப்பொழுது கொலைகளும் கொள்ளைகளும் மலிந்த பூமியாகிவிட்டது. கொழும்பிலும் புறநகர்களிலும் தனிப்பட்ட இடங்களில் மாட்டிக்கொள்ளும் அப்பாவித்தமிழர்களை இரகசியப் புலனாய்வுப் பொலிஸார்போல் நடந்து புலி என்று அவர்களை மிரட்டி நடக்கும் வழிப்பறிகள் வெளியில் தெரிந்தவைகளைவிட தெரியாதவை பல என்றேன்.

கொலைகளையும் நாட்டின் தரையில் நடக்கும் கொள்ளைகளையும் நிறுத்துவதற்கு வழியைக் காணவில்லை. வான்வழியாகப் புலிகள் வந்து தாக்குவதற்கு அவர்கள் போர் விமானங்கள் வைத்திருக்கிறார்கள் ன்று அரசும் படையினரும் ஓலமிடுகிறார்கள். இந்தியாவிடமும், புலிகளின் வான்படை பற்றி முறையிடுகிறார்கள். எங்கள் "புகார் அமைச்சர்" கதிர்காமர் இப்பொழுது அமெரிக்காவிடம்போய் வான்படைகள் பற்றி எச்சரிக்கை செய்திருக்கிறார். முன்பு புலிகளின் கடற்படை பற்றி இந்தியாவுக்கு முறையிட்டார். தென்னாசியாவிலேயே பெரிய கடற்படை புலிகளிடம்தான் இருக்கிறதென்றார். இப்பொழுத புலிகளின் வான்படையால் இந்தியாவின் பாதுகாப்புக்கே ஆபத்து என்று குரல் கொடுக்கிறார் என்றார் பரமசிவம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணமுடியாது. புலிகள் கோரும் தன்னாதிக்க அதிகாரசபை தமிழீழத்துக்கு வழிவகுக்கும், சமஷ்டி ஆட்சி என்பதும் புலிகளுக்கு நாட்டைப் பிரிப்பதாகவே முடியும். கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு அமைக்கப்படும் பொதுக்கட்டமைப்பையும் தனிநாடு பரியவே வழிவகுக்கும். வடக்கு கிழக்கு இணைந்த மாகாணமும் ஈழத்துக்கே வழிகாட்டும். எனவே விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டினால்தான் நாடு துண்டாடப்படுவதைத் தவிர்க்க முடியும். ஆனால் விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்டவோ, அழித்தொழிக்கவோ சிறிலங்காவிடம் படைபலம் இல்லை. இப்போதிருக்கும் படைகளால் புலிகளை வெற்றிகொள்ளமுடியாது இதுதான் சிங்கள அரசியல்ஆன்மீகவாதிகள்நிலைப்பாடு என்றேன்.

இதற்காகத்தான் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டுமென்று அவதிப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தம் செய்தாலும் இந்தியா ஆயுதங்கள்தான் கொடுக்கும். படைகளை அனுப்ப மாட்டாதே என்று பரமசிவம் சொன்னார்.

சொல்லமுடியாது. இந்திய நலன்களுக்குப் புலிகளால் ஆபத்தென்றால் இந்தியா படைகளை அனுப்பாதா என்றேன்.

நான் அப்படி நினைக்கவில்லை. இலங்கையை தனது மாநிலங்களில் ஒன்றாக இணைத்துக்கொண்டால், சிக்கும் நாடு. இன்று இந்திய மாநிலமாக இருப்பது போல் சிலோனும் ஒரு மாநிலமானால் இந்தியாவின் பாதுகாப்புப் படைகள் பாதுகாக்க முன்வரும் என்று கூறியபடி நகர்ந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

### வான்படையும் ஜனநாயகமும்

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அமெரிக்காவுக்குப் போய் அமெரிக்காவின் துணை ராஜாங்க அமைச்சர் கொண்டலிஸாறைஸ் அவர்களை சந்தித்து புலிகளிடம் விமான ஓடுபாதை, இரண்டு விமானங்கள், ஹெலிகொப்ரர் இருப்பதாகவும் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்க்கிறார்கள். ஜனநாயகம் பற்றியும் பழையபல்லவியைப் பாடியிருக்கிறார்.

கொண்டலிஸாவையும் பழைய பாணியில் ஜனநாயகம் இலங்கைத்திருநாடு முழுவதிலும் வியாபித்திருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். இந்தியாவும் புலிகளின் வான்படைபற்றி கவலை தெரிவித்திருக்கிறது.

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் போர் விமானங்கள் குண்டு வீசி அகதிகளையும், பாடசாலைப் பிள்ளைகளையும் மற்றும் பொதுமக்களையும் கொன்று குவித்தபோதும் மக்களின் குடியிருப்புகளையும், தேவாலயங்கள், மசூதிகள் வைத்தியசாலைகள், பாடசாலைகள் மீதெல்லாம் குண்டுவீசி அழித்தபோது கொண்டலிஸாவும் இந்திய அமைச்சர்களும் எங்கே போனார்கள்? இந்தியா இதுபற்றி பேசமுடியாது. இந்தியப் படைகள் தான் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களையும் மருத்துவ நிபுணர்கலளையும் சுட்டுக்கொன்றார்கள். இவர்கள் இப்பொழுது புலிகளிடம் வான்படை இருப்பது பற்றி கவலைப்படுகிறார்களா?

ஜனநாயகம் பற்றிப் பேசுகிறார்கள். ஜனநாயகத்தில் தான் இலங்கையில் தமிழ்மக்கள் அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டனர். முதலில் அரசியல் அமைப்பை மாற்றிவிட்டு ஜனநாயகம்பற்றிப் பேசலாம். கொண்டலிஸா றைஸ் முதலில் தமிழீழத்துக்கு வந்து பார்த்து, மக்களை சந்தித்து போகட்டும்.

நவாலி சுந்தரராசா

வாரநோக்கு.... - யாழவன் -

# புத்தர்சிலை விவகாரம் உயர்நீதிமன்றம்வரை செல்வது திசைதிருப்பும் நோக்கமாகும்!

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தற்போது சட்டமா அதிபர் ஊடாக உச்ச நீதிமன்றம்வரை கொண்டு செல்லப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்ற வண்ணமுள்ளன. திடீரென திருகோணமலையிலே முளைத்த புத்தர் சிலையின் காரணமாக தமிழ் - சிங்கள இன உறவுகளிலே விரிசல்களை மேலும் வலுப்படுத்தத்தக்க வகையிலே பிரச்சினைகள் அடுத்தடுத்து தோன்றி வருகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பிலே திருகோணமலை மாவட்ட நீதிமன்றினால் விடுக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவானது - செல்லுபடியற்றதாகக் கருதப்படுவதுடன், கவனத்திலும் கொள்ளப்படவில்லை. அதிலும் கவனிக்கத்தக்க விடயம் எதுவெனில், குறித்த புத்தர் சிலையை அகற்றும்படி இரண்டு முறை நீதிமன்றினால் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதும், இரு தடவையுமே அந்த உத்தரவுகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே ஜனாதிபதியினால் இது விடயம் தொடர்பாக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளை சட்ட நிபுணர்கள், பொலிஸ் தரப்பினர் என பலரும் தமக்குள்ளே கலந்துரையாடல்களை மேற்கொண்டு இந்த விவகாரத்தை சட்டமா அதிபர் உயர் நீதிமன்றிலே மனு சமர்ப்பிப்பதன் மூலமாக அணுக முடியுமெனத் தீர்மானித்து, அதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மனுவிலே தற்போது பிரச்சினையைக் கிளப்பியுள்ள புத்தர் சிலை விவகாரம் மட்டுமன்றி, இவ்வாறு அனுமதியின்றி அமைக்கப்பட்ட ஏனைய மத சிலைகள் தொடர்பாகவும், ஆராயப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது தற்போது நடைபெற்று வரும் பிரச்சினையைத் திசை திருப்பும் செயலாகக் கூட அமைவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது.

ஏனெனில் நீதிமன்று மூலமாக உரிய சட்ட விதிகளுக்கு முரணாக, அமைவாக அமைக்கப்பட்ட ஆலயங்கள் தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும் போது, பல ஆண்டுகளுக்குமுன் அமைக்கப்பட்ட சில ஆலயங்களில் கூட தற்போது சட்ட விரோதமானதாக கருதப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதன் வழி சில பிரபலமான இந்து மத வணக்கத் தலங்கள் கூட அகற்றப்பட வேண்டிய புறச் சூழ்நிலை உருவாக்கப்படலாம். இவ்வாறானதொரு புறச் சூழல் உருவாகும்போது, சிங்கள இனவாதிகள் அதனைத் தமது



ஆயுதமாகக் கைகளிலே ஏந்திக் கொண்டு, தமிழர்களையும் அவர்களது இன கலாசார விழுமியங்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கைகளிலே ஈடுபடுவதற்கு முனைவார்கள். அப்போது தற்போதைய பூதாகரமான புத்தர் சிலை விவகாரம் சிறு புள்ளியாக சிதறிவிடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இந்த அடிப்படை கபடத்தனமான நோக்கை இலக்கு வைத்தே இந்த சந்தர்பத்தில் ஏனைய சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள மதச் சிலைகள் தொடர்பாகவும் ஆராய முடியும் என்றும் கருத்து பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

தற்போது பிரச்சினையாகவுள்ளது புத்தர் சிலை விவகாரமே. அதனை மட்டும் கையாளுவதை விடுத்து, ஏனைய இதுவரை பிரச்சினையாகப் பார்க்கப்படாத விடயங்களையும் கையிலே எடுத்து, அவற்றையும் பிரச்சினைக்குள்ளாக்க முயலும் அரசின் முயற்சி நான்காம் கட்ட ஈழப்போரின் ஆரம்ப புள்ளியாக திருகோணமலையை மாற்றிவிடுவதற்கான வாய்ப்புகளை தோற்றுவித்துவிடும். மூன்றாம் கட்ட ஈழப்போர் கூட திருகோணமலை துறைமுகத்திலே நடத்தப்பட்ட கரும்புலித்தாக்குதல் மூலமாகவே ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் நான்காம் கட்ட ஈழப்போர் சிங்கள - தமிழ் இனக்கலவரத்தை மையமாக கொண்டு ஆரம்பமாகலாம் எனக் கருத வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

ஏனெனில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய குறித்த சர்ச்சைக்குரிய புத்தர் சிலையை அகற்றுவதற்கு பொலிஸார் முயன்ற போது, அதனைத் தடுத்த, இந்தப் புத்தர் சிலையை அமைத்த ஓட்டோ சாரதிகளும், பிக்குகளும், இந்தச் சிலையை இந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த முயலுவது திருகோணமலையிலிருந்து சிங்களவர்களை வெளியேற்றுவதற்கு சமனானது என கோசமிட்டுள்ளனர். இது மிகவும் வேடிக்கைக்குரியதுடன் வேதனைக்கும் உரியது.

காலம் காலமாகத் தமிழ் மக்களுக்கு மட்டுமே சொந்தமாக இருந்த திருகோணமலையை படிப்படியாக ஆக்கிரமித்து, அங்கு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு, ஊர்காவற்படை எனும் பெயரிலே குடியமர்த்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு ஆயுதங்களை வழங்கி, மெது மெதுவாக மேலும் மேலும் தமிழர்களது நிலப்பரப்புக்களை ஆக்கிரமித்து, இன்று திருகோணமலையில் பெரும் பகுதியைத் தமக்குச் சொந்த மாக்கியுள்ள சிங்களவர்கள், தமிழர்கள் செறிந்துவாழும் பகுதியிலே புத்தர் சிலையொன்றை அமைத்துவிட்டு, அதனை அகற்றுவது என்பது திருகோணமலையிலிருந்து சிங்களவர்களை வெளியேற்றுவதற்கு ஒப்பானது எனக் கூறுவதானது, நகைப்புக்கு இடமானதாகவே உள்ளது. அதாவது - இவர்களது கருத்தை வைத்துப் பார்க்கும்போது குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்டதன் மூலமாகத்தான் சிங்களவர்களின் இருப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கருத்துக்கொள்ளப்படவேண்டியுள்ளது. இது சிறுபிள்ளைத்தனமான கருத்தியலே ஆகும்.

போர் நடைபெற்ற காலங்களிலே இராணுவத்தினர் தாம் ஆக்கிரமித்த தமிழ் பிரதேசங்களில் எல்லாம் எங்கெங்கு அரசமரம் உள்ளதோ அங்கெல்லாம் புத்தர் சிலைகள் நிறுவி வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவும்கூட காலப் போக்கிலே பாரிய பின்னடைவுகளை தமிழர் தரப்புக்கு ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. போதாக்குறைக்கு அரசமரங்களின் கீழ்தான் புத்தர் சிலைகளை அமைக்கிறார்கள் எனப் பார்த்தால், ஆலமரங்களின் கீழும் புத்தர் சிலையை அமைத்து வருகிறார்கள். போர் ஓய்ந்துள்ள இந்த இடைநிலை காலப் பகுதியிலே புனிதரான புத்தரை தமது கையிலே இனஅழிப்பு, ஆக்கிரமிப்பு ஆயுதமாக எடுத்து, தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் அவர்களுக்கே உரித்தான பகுதிகளிலே இரவோடிரவாக புத்தர் சிலைகளை நிறுவி, காலப்போக்கிலே அந்த இடங்களைச் சிங்களப் பகுதிகளாக மாற்றுவதற்கான சதித் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சதித்தனமான வேலைகளில் இருந்து மலையகப் பகுதிகளும் தப்பித்துக் கொள்ளவில்லை. ஆனால் அந்தப் பகுதி மக்கள் இது தொடர்பிலே அதிக கவனமின்றி செயற்பட்டு வருகின்றனர்.

அப்பாவி மலையக மக்களது செறிவைக் குறைக்க அரசு மேற்கொண்டுவரும் கொடூரத்தனமான நடவடிக்கைகள் குறித்து, அந்த மலையக மக்களோ அல்லது அவர்களைத் தமது வாக்கு வங்கிகளாகப் பயன்படுத்திக் கொள்ளும் தலைவர்களோ கருத்தில் எடுக்கவில்லை. கருத்தடை முறைகளை மலையக பெண்களுக்கு இலவசமாக வழங்குவதன் மூலம், அவர்களது குடித்தொகையைக் குறைப்பதற்கான வழிகள் தற்போதிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது போன்று தற்போது வாழும் மக்களையும் பௌத்தர்களாக மாற்றும் முயற்சியாக ஆங்காங்கு புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு, பூசைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எனவே மேற்கண்ட புத்தர் சிலை விவகாரமானது - தனியே திருகோணமலையை மட்டும் ஆக்கிரமித்துள்ள விடயமன்று. அது திருகோணமலையிலே மட்டும் கவனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். காலப் போக்கிலே ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள புத்தர் சிலை விவகாரங்களும் கவனத்துக்கு எடுக்கப்படவேண்டியது அவசியமானதாகும்.

அதேவேளை இந்தப் புத்தர் சிலை விவகாரம், உயர் நீதிமன்றம்வரை கொண்டுசெல்லப்படும் விடயமானது இதனை வேறு திசையிலே திசைதிருப்பும் நோக்காகக்கூட அமையலாம். அதாவது - உயர்நீதிமன்ற விசாரணைகளின்படி சிலவேளைகளிலே இந்தப் புத்தர்சிலை விவகாரமானது- சட்டத்துக்கு அமைவானது, எனவும் தீர்ப்புகள் வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இது ஒன்றும் ஆச்சரியத்தனமான கருத்து அல்ல. ஏனெனில் அண்மைக் காலமாக உயர் நீதிமன்றினால் வழங்கப்பட்டுவரும் தீர்ப்புகள் பலவும் ஆச்சரியப்படத்தக்கவையாகவே உள்ளன.

குறிப்பாக பிந்துனுவெவ தடுப்புமுகாமிலே நடைபெற்ற கைதிகள் படுகொலையிலே சம்பந்தப்பட்ட கைதிகள் அனைவரும் தற்போது "சுற்றவாளிகள்" எனக் கூறப்பட்டு, மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டு மேற்கொண்டுவந்த விசாரணைகள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. இருபதுக்கு மேற்பட்ட தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்பட்ட விடயமானது தற்போது ஒரு சாதாரண விடயமாகவே கருத்தில் எடுக்கப்பட்டு, அந்தக் கொலையிலே சம்பந்தப்பட்டவர்கள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பானது, தமிழ் மக்களையும், மனிதநேயம் மிக்கவர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதுபோன்றே எதிர்காலத்தில் திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் சட்டத்துக்கு அமைவானது- எனக் கருதப்பட்டு நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

உங்கள் ராசியின்படி அஷ்டமத்துச் சனி விலகி, பாக்கியஸ்தானத்துக்கு சனிபகவான் செல்கிறார். இது சிறப்பான அம்சமாகும். சனி பகவானின் இந்தப் பாக்கியஸ்தான சஞ்சாரத்துக்கு லாபஸ்தானத்தில் உள்ள கேதுவும், குருவும் துணையாக இருக்கின்றனர். இதனால் அதிக வருமானத்தை அள்ளுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்குவீர்கள்.

புண்ணிய காரியங்கள், புனித பயணங்கள் போன்றவற்றை மேற்கொள்ளுவீர்கள். தந்தைவழிச் சொத்துகள் சிறிய குழப்பத்துக்குப் பிறகு வந்துசேரும். ஆனால் மனச் சஞ்சலம் என்பது தொடர்ந்துகொண்டே இருக்கும். எல்லாம் இருந்தும், எதுவும் இல்லை என்ற மனநிலையிலேயே இருப்பீர்கள். இதற்கு ராகு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அமர்ந்திருப்பதுதான் காரணம்.

உத்யோகத்தர்கள் சோதனைகளைக் கடந்து சற்று பெருமூச்சு விடும் காலம் இது. அதே நேரம் மேலதிகாரிகள், சக ஊழியர்கள் ஆகியோரை அனுசரித்துச் செல்வதும் நலம் பயக்கும். வருமானம் ஒரே மாதிரியே இருக்கும். இதைப் பெரிதுபடுத்தாதீர்கள். ஆனால் பலம் பொருந்திய கேதுவினால் உங்களுக்குக் கிடைக்கவேண்டிய அனைத்தும் கிடைத்துவிடும்.

வியாபாரிகளுக்கு இந்த இரண்டரை ஆண்டுகளும் சற்றுக் கூடுதலான பலன்கள் கிடைக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சுமுகமாக முடியும். கடையில் புதிய பொருட்களை வாங்கி, லாபத்தைப் பெருக்கலாம். நண்பர்களால் நன்மை அடைவீர்கள். அதனால் அவர்களிடம் ஆலோசனை செய்த பிறகு முடிவுகளை எடுக்கவும். புதிய முயற்சிகளை யுக்தியுடன் எடுத்தால், நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

விவசாயிகளுக்கு லாபம் அதிகரிக்கும். இதனால் கொள்முதல் பொருட்களை விற்று, நல்ல லாபத்தை அடைவீர்கள். குறிப்பாக விவசாயத்தில் பயிர் சுழற்சி முறையைப் பின்பற்றுபவர்கள் நல்ல பலனைப் பெறுவார்கள். அத்தோடு நீர்ப்பாசனத்தில் அதிக கவனம் செலுத்தினால் வருங்காலம் நன்றாக அமையும்.

அரசியல்வாதிகளுக்குப்

## விருச்சிகம்

பெயரும், புகழும் அதிகரிக்கும். அதேநேரம் எந்த வேலையையும் நன்றாகத் திட்டமிட்டே செய்யவும். உங்களின் ரகசிய செயற்பாடுகளை மற்றையவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு உள்ளதால், கவனத்துடன் இருக்கவும். உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் தொண்டர்களை அரவணைத்துச் செல்லவும். அதேநேரம் சிலருக்குத் திடீரென கட்சி மேலிடம், பொறுப்புகளை வழங்கும். அதில் கவனமுடன் செயற்பட்டு நற்பெயரை வாங்குவீர்கள். கலைத்துறையினருக்கு இந்தச் சனிப்பெயர்ச்சி, புதிய ஒப்பந்தங்களை ஈட்டித் தரும். இதனால் மற்றையவர்களின் அபிமானத்தைப் பெறுவீர்கள். பாராட்டு மழையில் நனைவீர்கள்.

அதேநேரம் தொழிலில் போட்டி நிலவும். அதிக கவனத்துடன் உழைத்தால் பெயர் சொல்லும் அளவுக்கு விருதுகளும், பரிசுகளும் பெறுவீர்கள். அரசாங்கத்தால் கௌரவிக்கப்படுவீர்கள். சில கலைஞர்களுக்கு வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கும் யோகமும் உண்டாகும்.

பெண்மணிகள் குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பார்கள். கணவருடனான ஒற்றுமை அதிகரிக்கும். உழைக்கும் மகளிருக்கு இந்தக் காலகட்டம், பல பாக்கியங்களை வழங்கும். சிறு சிறு விடயங்களைப் பெரிதுபடுத்தாமல் விட்டுக்கொடுத்து அனைவரையும் அனுசரித்துச் செல்வது உங்களின் பெருமையை உயர்த்தும்.

மாணவமணிகளுக்கு இது முன்னேற்றகரமான பெயர்ச்சி. நல்ல மதிப்பெண்களைப் பெற்றுத் தேர்வில் வெற்றியடைவீர்கள். ஆனாலும் படிப்பில் இன்னமும் சற்றுக் கூடுதல் கவனத்தைச் செலுத்தினால், சக மாணவர்களை மிஞ்சிவிடும் அதிர்ஷ்டத்தை சனி பகவான் வழங்குவார். மேற்படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள், தாங்கள் விரும்பிய பாடப் பிரிவில் சேர்ந்து மகிழ்ச்சியடைவீர்கள். இந்த ராசியைக் கொண்ட மாணவர்கள், கடல் கடந்து சென்று, வெளிநாட்டில் கல்வியைத் தொடரும் வாய்ப்பு உள்ளது.

**பரிகாரம் :** திங்கட்கிழமையன்று பார்வதி தேவியை வணங்கவும். அவருக்கு அர்ச்சனை, ஆராதனை செய்து வழிபடவும்.

# யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு-

**பிரிவு 5 - ஆக்கம் எழுத்து**

1 ஆம் இடம் - கோ.திரியம்பதி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), 2 ஆம் இடம்-பி. குணவரன் (யாழ்.சென்.ஜோன்ஸ் பொஸ்கோ), 3 ஆம் இடம் - ம. மயூரவாணி (உரும்பிராய் சைவத் தமிழ்)

**பிரிவு 2 - கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்**

1 ஆம் இடம் - இ.பவித்திரா (வேம்படி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - ச.சங்கீதா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - இ.வினு (யாழ்.இந்துக் கல்லூரி),

**பிரிவு 3 - கட்டுரை வரைதல் கடிதம் எழுதல்**

1 ஆம் இடம் - பு.லக்ஷிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - இ.சுவேந்தர் (செங்குந்தா இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - வ.நிஷாந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி)

**பிரிவு 4 - கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல்**

1 ஆம் இடம் - வி.அனுத்திரிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் -பு. நிரோஜா (புனித மரியாள் வித்தியாலயம்), 3 ஆம் இடம் -ச.சுதர்சனா (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**பிரிவு 5 - தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

1 ஆம் இடம் - ஜெ.தர்சினி (கனகரட்ணம்.ம.ம.வி), 2 ஆம் இடம் - கு.பிரதீபா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - பா.யதுப்பிரியா (அச்சுவேலி மத்திய கல்லூரி)

**பிரிவு 4 - இலக்கணப் போட்டி**

1 ஆம் இடம் - உ.தனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - கி.டல்ஷினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - கு.ரஷிதா (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**பிரிவு 5 - இலக்கணப் போட்டி**

1 ஆம் இடம் - த.கஜேந்திரன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), 2 ஆம் இடம் வே. சாமந்தி (வேம்படி மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் தி.கல்பனா (அச்சுவேலி மத்திய கல்லூரி)

**பிரிவு 5- திறனாய்வுப் போட்டி**

1 ஆம் இடம் -ஞா.பற்றீஷியா (சென்.சாள்ஸ்.ம.வி.), 2 ஆம் இடம் - தெ.ஹர்சன் (யாழ். மத்திய கல்லூரி), 3 ஆம் இடம் -க.ராதிகா (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**பிரிவு 4 - குறுநாடக ஆக்கம்**

1 ஆம் இடம் - சி.சுகந்தினி (யாழ்.கிறிஸ்தவக் கல்லூரி), 2 ஆம் இடம் - சி.விஜயகாந்த் (உயரப்புலம் மே.மி.வி.வி), 3 ஆம் இடம் - கி.ரேகா (வைத்தீஸ்வரா கல்லூரி)

**பிரிவு 5 - குறுநாடகம்**

1 ஆம் இடம் - து.தசோனியா (புனித திரேசாள் வித்தி), 2 ஆம் இடம் - ம.அன்ரனீஸ் (சென்.சாள்ஸ் ம.வி.), 3 ஆம் இடம் - டி.பௌசிகா (யாழ். கிறிஸ்தவக் கல்லூரி)

**பிரிவு 4 - கவிதை ஆக்கம்**

1 ஆம் இடம் - செ.மேரி றொக்சிகா (திருக்குடும்ப கன்னியர் மடம்), 2 ஆம் இடம் - ச. மீரா (நல்லூர் ஸ்தான சி.சி. த.க.), 3 ஆம் இடம் - அ.முருகதாஸ் (கோப்பாய் ம.வித்தியாலயம்)

**பிரிவு 5 - கவிதை ஆக்கம்**

1 ஆம் இடம் - ம.வானதி (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), 2 ஆம் இடம் - ந.பிரபு (யாழ். இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - க.தர்சிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**பிரிவு 4 - சிறுகதை ஆக்கம்**

1 ஆம் இடம் - மி.சுலித்தின் விஜித்தா (புனித திரேசாள் மகளிர்), 2 ஆம் இடம் - ஸ்ரீ.சிவகஜனி (வேம்படி மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் -சோ. ஜெயதேவி (யாழ்.கிறிஸ்தவக் கல்லூரி)

**பிரிவு 5 -சிறுகதை ஆக்கம்**

1 ஆம் இடம் ர.சோபிகா (அத்தியார் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - கா.யுகவேந்திரா (சென்.ஜோன்ஸ் கல்லூரி), 3 ஆம் இடம் - ச.பிருந்தா (கனகரட்ணம் ம.ம.வி)

**வாசிப்பு**

1 ஆம் இடம் - சி.அர்ச்சனா (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), 2 ஆம் இடம் - ச. பெஞ்சமின் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ), 3 ஆம் இடம் - நிரோஜி (கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தி)

**வாசிப்பு**

1 ஆம் இடம் - ஜெ.லக்ஷி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் ச.யதூரஷன் (யாழ். இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் - க.அபிரா (கோண்டாவில் பரஞ்சோதி)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதை கூறல்**

1 ஆம் இடம் ஞா.துவாரகா (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), 2 ஆம் ச.திலக்ஷன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), 3 ஆம் இடம் - யோ. சுபாஷினி - திருக்குடும்ப கன்னியர் மடம்)

**பேச்சு**

1 ஆம் இடம் - ஞா.அபிராமி (புனித திரேசாள் மகா வித்தி), 2 ஆம் இடம் - பா.கஜானன் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ), 3 ஆம் இடம் - க.பவந்தினி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

**பேச்சு**

1 ஆம் இடம் - சா.மதுரமி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - ச.யூட் நிதர்சன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), 3 ஆம் இடம் - சா.துசாந்தினி (உரும்பிராய் இந்துக் கல்லூரி)

**பேச்சு**

1 ஆம் இடம் - ர.செந்தூரதாஸ் (யாழ்.மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் - வ.தயாளன் (கொட்டடி நமசிவாய வித்தி), 3 ஆம் இடம் ஜெ.இராஜசிருங்காரி (ஊரெழு கணேசா வித்தி)

**பேச்சு**

1 ஆம் இடம் - வி.நரேஸ்வகுமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம் - க. சக்திநாயகி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - ச.கோபிநாத் (யாழ்.மத்திய கல்லூரி)

**பேச்சு**

1 ஆம் இடம் - க.கமலேஸ்வரன் (யாழ்.மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் - ம.அருளியன் (யாழ்.இந்துக் கல்லூரி),3 ஆம் இடம் - கே.ஹம்சினி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)

**பாவோதல்**

1 ஆம் இடம் ஜெ.மதூசிகன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), 2 ஆம் இடம் - சு. நாராயணி (புனித ஜோன் பொஸ்கோ), 3 ஆம் இடம் - ப. சாயீசன் (சென்.ஜோன்ஸ்.கல்லூரி)

**பாவோதல்**

1 ஆம் இடம் - ப.கஜலக்சுமி (கோண்டாவில் இராமகிருஷ்ண), 2 ஆம் இடம் - அ.டெ.ஜெரின்சியா (வேம்படி மகளிர் கல்லூரி) 3 ஆம் இடம் - ஜெ.கஜனி (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க)

(தொடரும்) (58)

## பேராசிரியர் நந்தியின் இறுதி நிகழ்விலிருந்து...






ஓவியர் புகழேந்தியின்

**புயலின் நிறங்கள்**



ஓவியக் கண்காட்சியும் கருத்துப் பகிர்வும்

அமரர் பேராசிரியர் நந்தி அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக 06-06-2005 ஆம் திகதி நடைபெறவிருந்த கண்காட்சி நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டு,

இன்று 07-06-2005 (செவ்வாய்க்கிழமை) மட்டும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 08-06-2005 அன்று வடமராட்சியில் நெல்லியடி அரசடி அ.த.க.பாடசாலை மண்டபத்திலும், 09-06-2005 ஆம் திகதி தென்மராட்சியில் நுணாவில் அமிர்தாம்பிகை அ.த.க பாடசாலை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வதேச மாணவர் பேரவையினரும்,
நுண்கலைக் கல்லூரியினரும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 20 வருடங்களின் பின் ஜூரி சபை விசாரணை

யாழ்ப்பாணம் —

புத்தூரில் இராசரட்ணம் உதய குமார் என்பவர் கொலைசெய்யப் பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வழக்கு - இன்று காலை 9 மணிக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் - ஜூரிசபையின் முன் னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் புத்தூரில் இராசரட்ணம் உதயகுமார் என்பவரை கொலை செய்ததாக அந்த ஊரைச் சேர்ந்த பூதத்தம்பி முருகானந் தன், பூதத்தம்பி மகேந்திரன் ஆகியோ ருக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ். மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு, இன்று ஜூரி சபை முன்னிலையில் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள் ளது.

சுமார் 20 வருடங்களுக்குப் பின் னர் யாழ். மேல்நீதிமன்றத்தில் ஜூரி சபையின் முன் வழக்கு நடைபெற விருப்பது குறிப்பிடத்தக்கது.

# கரையோர சுவீகரிப்புக்கு எதிராக அம்பாறையில் ஆர்ப்பாட்டம்!

அம்பாறை

அம்பாறை மாவட்டத்தில் கரை யோரப் பகுதியை சுற்றுலா பயணத் துறை சுவீகரிக்கும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரி வித்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டதுடன் அமைச்சர் அநுரா பண்டார நாயக்கவின் கொடும்பாவியையும் எரித்தனர்.

பொத்துவில் பிரதேசத்தில் உல்லை தொடக்கம் பாணமை வரையிலான 17 கிலோமீற்றர் நீளமான கரையோ ரப் பிரதேசத்தை உல்லாசப் பயணத் துறை சுவீகரிக்க மேற்கொண்டுவரும்



நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்று மூவினமக்களையும் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பிட்ட கரையோரப் பிரதேசத் தில் 35 மீற்றர் கரை எல்லை பிரதே சத்தில் அனுமதியில்லாத கட்டட உரி மையாளர்கள் உடனடியாக வெளியேற வேண்டும்.

இல்லையேல் புல்டோசர் கொண்டு கட்டடங்கள் தகர்க்கப்படும் என கரை யோரப் பாதுகாப்புச் சபை தற்போது அறிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை யின் முடிவுக்கமைய இந்தப் பிரதேசம் உல்லாசப் பயணத்துறை பிரதேசமாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

நேற்றுக்காலை அறுகம்மை பாலத் துக்கு அருகில் ஒன்றுகூடிய அந்தப் பிரதேச மக்கள் பெரியஉல்லையி லுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகம் வரை பேரணியாகச் சென்று இந்தத் திட்டத்தைக் கைவிட கோரும் மனுவொன்றை அதிகாரி களிடம் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது உல் லாசப் பயணத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா, உல்லாச பயணச்சபைத் தலைவர் உதய நாண யக்கார ஆகியோரின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன.

## அரசியல்துறைப் போராளி மீது அதிரடிப்படையினர் தாக்குதல்!

அம்பாறை —

விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்டம் வீரமுனைக்கோட்டத்தி லுள்ள நாவிதன்வெளி அரசியற் துறைப் பொறுப்பாளர் சதீசன் விசே ட அதிரடிப்படையினரால் கடுமையா கத் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

தாக்கப்பட்ட போராளி நாவிதன் வெளி அரசியற்துறை அலுவலகம் முன்பாக நின்றபொழுது அந்தப் பகுதி யூடாக றோந்து நடவடிக்கையில் ஈடு பட்டிருந்த வேப்பையடி விசேட அதிர டிப்படையினர் இவரைக் கடுமையா கத் தாக்கியதுடன், அலுவலகவாயில் கதவுகளையும் அடித்து உடைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இது குறித்து மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கடற்தொழில்...

தும் விளக்கமளிக்கப்பட்டதுடன் - கல்வி, சுகாதாரம், வேலையின்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இந் தச் சந்திப்பின்போது விளக்கமளிக்கப்பட்டது.

இதன் பின்னர் கருத்துதெரிவித்த மனித உரிமைகள் ஆணைக்குழு வின் தலைவர் - யாழ் குடாநாட்டில் மனித உரிமைகள் மீறும் சம்பவங் கள் அதிகரித்துள்ளன.

ஐ.நா.மனிதஉரிமைகள் சாசனத் தின் அடிப்படையில் மக்களின் உரி மைகள் பேணப்படவேண்டும்: இதற்கு அனைத்து தரப்பினரும் உதவ வேண்டும். அத்துடன் உயர் பாது காப்பு வலயங்களினால் பாதிக்கப் பட்ட மக்களின் தொழில் பாதிக்கப் படாத வகையில் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட் வேண்டும். முன்னிலையில் இருந்து வந்த குடா நாட்டு பாரம்பரிய கல்வியில் தற் போது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அத்துடன், பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளன. எனவே குடாநாட்டில் கல்வித்தரத்தை பேணு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குடாநாட்டில் உள்ள தொழிற் சாலைகளை மீண்டும் இயங்கச் செய்து, வேலையற்று இருக்கும் இளை ஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுடன் -

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண் டார். இந்தக் குழுவினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட பிரதிநிதிகள், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். மாவட்ட - நீதிபதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

## கொழும்பு...

இவரது சடலம் பிரேத பரிசோத னைக்காக களுபோவில வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

இறந்தவரின் காற்சட்டை பையில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் சென்றுவருவதற் கான பாஸ் இருந்ததாகவும் - இது மூன்று நாட்களுக்கு முன்னர் விநி யோகிக்கப்பட்டிருந்ததாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் மீது மிக மிக நெருக்க மாக நின்று 9 மி.மீ துப்பாக்கியால் சுடப் பட்டதாகவும் பொலிஸ் தரப்புத் தகவல் கள் கூறுகின்றன.

# பொதுக்கட்டமைப்புக்கு மாற்றீடாக தேசப்பற்று இயக்கம் புதிய யோசனை

கொழும்பு —

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளைப் புனரமைக்க விடு தலைப் புலிகளுடன் இணைந்து உரு வாக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்புக்குப் பதிலாக - மாற்று யோசனை ஒன்றை தேசப்பற்று தேசிய இயக்கம் முன்வைத்துள்ளது.

தேசப்பற்று தேசிய இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் - அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, பேரியல் அஷ்ரப், தினேஷ் குணவர்த்தன ஆகியோரை நேற்றுச் சந்தித்துப் பேசியபோதே இந்த மாற்றுயோசனையை முன்வைத் ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது பொதுக் கட்டமைப்புக்கு தமது எதிர்ப்பை வெளிக் காட்டிய இயக்கத்தின் இணைத் தலை வர் எல்லே குணவன்ச தேரர், பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டால் அது நாட்டின் இறைமைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரித் தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யில் அங்கம் வகிக்கின்ற முக்கிய கட்சி களின் உறுப்பினர்களை தாம் சந்தித்து உரையாடியதாகவும் இதன்போது பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் நாட்டில் ஏற்படப்போகும் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து தமது அக்கறை யைத் தெரிவித்ததாகவும் அவர் குறிப் பிட்டார்.

இதேவேளை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் இன்று ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவை சந்தித்துப் பேசவுள்ளதுடன் இரண் டொரு நாட்களில் பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவையும் சந்திக்கவுள்ளனர். (01)

## வாழைச்சேனை...

லப்பட்ட பின்பு மாலையில் காயங் கேணி என்னுமிடத்தில் வீதியில் வீசப்பட்டுள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி யிலிருந்து கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட இவரது சடலம் கைகள் கட்டப்பட்ட நிலையில் தலையில் துப் பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண் டெடுக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைக்கு ரி-56 ரக துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள் ளது. இந்தக் கொலை தொடர்பான மரண விசாரணை நேற்று மாலை வாழைச்சேனை வைத்தியசாலை யில் நடைபெற்றது. பதில் நீதிபதி கா. தங்கவடிவேல் முன்னிலையில் உற வினர்கள் சடலத்தை அடையாளம் காட்டி சாட்சியமளித்து பொறுப்பேற் றுக்கொண்டனர்.

## கருணா...

அன்றிரவே துப்பாக்கிச்சூட்டுச் சத் தங்கள் கேட்டதாக அந்தப் பகுதி பொது மக்கள் படையினருக்கும் பொலிஸா ருக்கும் கொடுத்த தகவலை அடுத்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்ட போதே மேற்படி கருணா குழு உறுப் பினர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களு டன் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தலதா...

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான சாகும்வரையான இந்த உண்ணா விரதப் போராட்டத்தில் அத்துரலிய ரத்ன தேரர் உட்பட ஜாதிகஹெல உறுமய வின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

விடுதலைப்புலிகளுடன் இணைந்து ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை ஏற் படுத்துவாராக இருந்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த நடவடிக் கையை மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை எனத் தெரிவித் தார்.

## புலிகளின்...

போதும் இராணுவம் என்கின்ற வகை யில் அரசின் முடிவுகளையே நாம் செயற்படுத்துவோம்.

விடுதலைப் புலிகளின் வான் படை எந்தவகையில் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பது குறித்து எம்மால் கூற இயலாது. இது தொடர்பான செய்மதிப் படங்களும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித் தார்.

## பொதுக் கட்டமைப்பு...

செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத் திட்டால் 7 மாகாண சபைகளிலும் அரசுக்கு ஜே.வி.பி. அளித்துவரும் அதரவை விலக்கிக்கொள்ளப்போவ தாக ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா இன்றைய கூட்டத்தில் ஜே. வி.பி. மீது கடுமையான நிலைப் பாட்டை வெளிப்படுத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி சந் திரிகா நேற்று பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவுடனும், சட்ட நிபுணர்களுட னும் முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்ட தாகத் தெரியவருகிறது.

கதிர்காமத்தில் தங்கியிருந்த பிரத மர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டு இந்தச் சந் திப்பு நடைபெற்றதாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்தார்.

பொதுக் கட்டமைப்பு உடன்பாடு குறித்த சட்ட ரீதியான விடயங்கள் குறித்து நேற்று ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சகோதரனை கொலை செய்தவருக்கு ஐந்து வருடகால சிறைத்தண்டனை!

## யாழ். மேல்நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம் —

தனது சகோதரனை அலவாங்கி னால் குத்திக் கொலைசெய்த கிருஷ்ண பிள்ளை முரளீதரன் என்பவருக்கு மேல் நீதிமன்றம் ஏழு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட - 5 வருட சிறைத்தண் டனையை விதித்தது.

இதுகுறித்து மேலும் தெரியவருவ தாவது -

2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முத்திரைச்சந்தியில் உள்ள வீட்டில் வைத்து கிருஷ்ணபிள்ளை சந்திரன் என்பவரை அலவாங்கினால் குத்திக் கொலை செய்ததாக அவரது சகோதர ரான கிருஷ்ணபிள்ளை முரளீதரன் என்பவருக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு - யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட் டது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வர் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு அமைய அவருக்கு நீதிபதி ஏழு வரு டங்கள் ஒத்திவைக்கப்பட்ட 5 வருட சிறைத்தண்டனை விதித்ததுடன் கொலை செய்யப்பட்டவரின் மனை விக்கு 25000 ரூபாவை நஷ்டஈடாக வழங்கவேண்டுமெனவும் அவரது ஆறு வயதுக் குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு 5000 ரூபா வீதம் 20 மாதங்களுக்கு ஒரு லட்சம் ரூபாவை வைப்பிலிட வேண்டுமெனவும் 3 வயதுப் பெண் குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 5000 வீதம் 35 மாதங்களுக்கு ஒரு லட்சத்து 75000 ரூபாவை வங்கியில் வைப்பிலிட வேண்டுமெனவும் நீதிபதி கட்டளை யிட்டார்.

மேலும் எதிரியின் விரல் அடை யாளத்தை பதிவுசெய்யுமாறும் பொலி ஸாருக்குக் கட்டளையிட்டார்.

# ஈ.பி.டி.பி. துணை அமைப்பாளரின் வீட்டின் மீது கிரனைட் தாக்குதல்!

மட்டக்களப்பு —

ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட துணை அமைப்பாளரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண் டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈ.பி.டி.பி. துணை அமைப்பாளர் கந்தையா அருமைலிங்கத்தின் வீட் டின் மீது நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத் தப்பட்டது. மட்டக்களப்பு - கல்முனை வீதி கலட்டியிலுள்ள இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டவேளை அவ ரது மனைவியும் பிள்ளைகளும் மட் டுமே வீட்டில் இருந்தனர்.

இந்தத் தாக்குதலின்போது வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்புக்கள் ஏற் படாதபோதிலும் வீட்டின் முன்பகுதி சிறு சேதமடைந்தது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை யின் முன்னாள் உறுப்பினரான இவர், தற்போது பனை அபிவிருத்திச்சபை யின் பணிப்பாளர் சபை உறுப்பினராக அங்கம் வகித்துவருகிறார்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாப னத்தின் தமிழ்ச்சேவையில் ஈ.பி.டி.பி யினரால் ஒலிபரப்பப்படும் இதயவீணை நிகழ்ச்சியில் வரும் நாடகங்களில் போடியராக இவர் வருகிறார்.

கடந்த மாதம் 14 ஆம் திகதியும் இவரது வீட்டின் மீது இதேபோன்று கைக்குண்டுத் தாக்குதலொன்று மேற் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சர்வமதத் தலைவர்கள் தமிழர்தரப்புடன் பேச்சு!

திருகோணமலை —

திருகோணமலையில் நிறுவப் பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலை தொடர்பாக சர்வமதத் தலைவர் களும், தமிழர் தரப்பினரும் சந்தித் துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது நகரின் தற்போதைய நிலவரம் தொடர்பாக இரு தரப்பினரும் கூடி ஆராய்ந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பான முடிவுகளை மிகவும் அவதானமாக எடுக்கவேண்டும். இதன் மூலமே சமூ கங்களுக்கிடையிலான சிக்கல்கள் உருவாகாமல் தடுக்க முடியும் என மாதம்பகம் ஆஸாஜிதேரர் தெரிவித் தார்.

சர்வமத குருமார்களால் இந்தச் சிலை அகற்றமுடியாத பட்சத்தில், இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு எவ் வாறாக அமைந்தாலும் அதை நடை முறைப்படுத்த சர்வமதகுருமார் உதவவேண்டும் என திருகோண மலை தமிழர் பேரவையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் கேட்டுக்கொண் டார்.

சர்வமத குருமார்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் இராசதுரை
### (இராசா அண்ணை)

கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், மலைவேம்படி அளவெட்டி யைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராசதுரை அவர்கள் 04.06.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கணேச லிங்கம், விஜயலட்சுமி, சண்முகலிங்கம், செல்வலட்சுமி, சற்குணலிங்கம் (லிங்கம், நோர்வே), பவளலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சனின் பெரிய தந்தை யும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 08.06.2005 புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி தம்மலை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

*மலைவேம்படி,*
*அளவெட்டி.*
(இ)
தகவல்:
பிள்ளைகள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.